வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959　Reg. No. : P . 1632　விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu　ඊළනාඩු

Email : news@eelanadu.lk　மலர் : 03　11.07.2022 திங்கட்கிழமை　இதழ் : 217　பக்கங்கள் : 16




# இலங்கையில் அமைதிக்கு வேண்டுகின்றார் பாப்பரசர்!

## மக்களின் துயரத்தில் பங்கேற்பதாக அவர் தெரிவிப்பு



**வத்திக்கான் சிற்றி, ஜூலை. 11**

**பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் இன்று இலங்கையில் அமைதிக்கான தனது வேண்டுகோளை விடுத்துள்ளார்.**

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் இலங்கை மக்களின் துயரத்தில் 'நான் என்னை ஒன்றிணைக்கிறேன்' என்று பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாராந்த பிரார்த்தனையை தொடர்ந்து கூறினார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, மக்களின் பிரச்னைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அது தீர்க்கப்படவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## விமல் மீது தாக்குதல் முயற்சி

*கொழும்பு, ஜூலை. 11*

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மீது தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து

15

## சர்வகட்சி அரசுக்கு அனைத்தும் தயார்!

*கொழும்பு, ஜூலை. 11*

மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர எதிர்க்கட்சிகளின் அனைத்து முக்கிய அரசியல் கட்சிகளும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று சர்வகட்சி ஆட்சியை அமைப்பதற்கு பொதுவான உடன்பாட்டை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் உத்தேச சர்வகட்சி அரசாங்கத்தை விரைவாக அமைக்க தீர்

15

## காயமடைந்தோர் எண்ணிக்கை 103!

*கொழும்பு, ஜூலை. 11*

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் சிக்கி காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 103 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 55 பேர் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையும் 11 ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

15

## இலங்கை மக்களுக்கான ஆதரவு அதிகரிக்கப்படும்

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

*கொழும்பு, ஜூலை. 11*

இலங்கையின் அபிவிருத்திகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் சனத்தொகைக்கான தனது ஆதரவை மேலும் அதிகரிப்பதற்கான தெரிவுகளை மதிப்பீடு செய்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

அறிக்கை ஒன்றினை வெளியிட்

15

## இராணுவ பாதுகாப்பில் உள்ளார் கோட்டாபய!

### மூத்த பாதுகாப்பு அதிகாரி தகவல்

*கொழும்பு, ஜூலை. 11*

மக்களின் எழுச்சிப் போராட்டத்தின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ இப்போது எங்கே இருக்கிறார் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதி மாளிகைக்குள் மக்கள் நுழைவதற்கு முன்பே அவரை வெளியேற்றிவிட்டார் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"அரச தலைவர் பாதுகாப்பாக அழைத்துச்

15

## இலங்கைக்கு தொடர்ந்தும் உறுதுணையாக இருப்போம்

### இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

*கொழும்பு, ஜூலை. 11*

இந்த நெருக்கடியின் போது இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

திருவனந்தபுரம் விமான நிலையம் அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னேற்றங்களை கண்காணித்து வருவதாகவும், இப்போது அகதிகள் நெருக்கடி இல்லை என்றும் கூறினார்.

தற்போது

15

## இலங்கை நிலைமை கவலையளிக்கிறது!

### சோனியா காந்தி வருத்தம்



*கொழும்பு, ஜூலை. 11*

இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவுமாறு சர்வதேசத்தை இந்திய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொள்கிறது என சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் குறித்து காங்கிரஸ் கட்சி

15

## இலங்கை நெருக்கடிக்கு தீர்வை அடைய முடியும்!

### சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

*கொழும்பு, ஜூலை. 11*

இலங்கையில் தற்போதைய நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகி சர்வகட்சி அரசை அமைப்பதற்கான நகர்வுகளைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கையிலேயே சர்வதேச நாணய நிதியம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பான பேச்சுக்களை தொடர்வதன் ஊடாக தற்போதைய நிலைமைக்கு தீர்வு காண முடி

15

## நெருக்கடிகளுக்கு நீண்டகால தீர்வு பெற புதிதாக வரும் அரசு உழைக்கவேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

*நியூயோர்க், ஜூலை. 11*

இலங்கையில் மக்கள் கிளர்ச்சி மூலம் ஜனாதிபதி செயலகம் கைப்பற்றப்பட்டதுடன், பதவி விலகுவதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில் நாடு எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு நீண்டகாலத் தீர்வைப் பெறும் முயற்சிகளில் துரிதமாக ஈடுபடுமாறு இலங்கைத் தலைவர்களை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அமையவுள்ள எந்தவொரு புதிய அரசாங்கமும் நீண்டகாலப் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடையக்கூடிய மற்றும் இலங்கை மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்யக்கூடிய தீர்வுகளை விரைவாகக் கண்டறிந்து செயற்படுத்தவேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

பதின்மூன்றாம் திகதி தான் பதவியிலிருந்து வெளியேறுவதாக ஜனாதிபதி தன்னிடம் தெரிவித்ததாக சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

அதனை ஏன் ஜனாதிபதி தானாக அறிவிக்கவில்லை என்பது தெரியவில்லை. ஆனால், உடனடியாகவே பதவி விலகாமல், பதவியிலிருந்து வெளியேறுவற்கு ஜனாதிபதி எதற்காக மூன்று நாட்கள் கால அவகாசம் எடுத்தார் என்பதும் தெரியவில்லை. ஆனால், ஒவ்வொருவரும் தத்தமக்கு தெரிந்தவகையில், அல்லது தத்தமது கற்பனைகளுக்கு அமைய கருத்துக்களை சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

ஆனால், ஜனாதிபதி இப்போது எங்கே இருக்கிறார் என்பதும் தெரியவில்லை. அதனையும் பலரும் பலவேறு விதமாக எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார் என்று சர்வதேச செய்தி நிறுவனங்களில் ஒன்றான 'ஏஎவ்பி' கூட செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறு அவர் வெளியேறியிருந்தால், அவர் எந்த நாட்டில் போய் இறங்கினார் என்பதையும் கண்டறிவது ஏஎவ்பி போன்ற சர்வதேச செய்தி நிறுவனத்திற்கு பெரிய விடயமல்ல.

இப்போது அவர் எங்கே இருக்கிறார் என்பதல்ல முக்கியமானது, அவர் பதின்மூன்றாம் திகதி பதவியிலிருந்து வெளியேறுவாரா என்பதே மில்லியன் டொலர் அல்ல, பில்லியன் டொலர் கேள்வி.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாக ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் என்று நாட்டில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அனைத்து எதிர்க் கட்சிகளும் அதனையே கோரி நின்றன.

இப்போது அவ்வாறு ஓர் அரசாங்கம் அமைகின்றபோது அவர்களுக்கு வழிவிட தான் பதவியிலிருந்து விலகத் தயார் என்று பிரதமர் தெளிவாக தெரிவித்துவிட்டார்.

அவர் தனது அறிவிப்பிலேயே, தான் பிரதமர் பதவியிலிருந்து வெளியேறினால், உடனடியாக ஓர்அரசாங்கம் இந்த நாட்டில் இருக்கவேண்டும் என்றும், இவ்வாரம் நாட்டுக்கு எரிபொருள் வரவிருக்கின்றது. அதனை மக்களுக்கு விநியோகிக்க வேண்டியிருக்கின்றது. உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைத்தன்மை அறிக்கை என்பனவற்றை கருத்திற்கொண்டு ஓர் அரசாங்கம் நாட்டில் இருப்பதை உறுதிசெய்யவேண்டியிருக்கின்றது என்றும் வலியுறுத்தியுள்ள பிரதமர், அனைத்துக் கட்சிகளும் தாம் விரும்பியவாறு அரசாங்கம் ஒன்றை அமைக்க தயாரானதும் தான் பதவிவிலக தயாராக இருப்பதாவே அறிவித்திருக்கின்றார்.

அவ்வாறு இல்லாமல், தான் பதவி விலகிய உடனே புதிய அரசாங்கம் பதவியேற்க முடியவில்லை என்றால், நாடு அரசாங்கம் இல்லாத நாடாகிவிடும் என்பது பிரதமரின் எச்சரிக்கை. அதனால்தான் அவர், அனைத்துக் கட்சிகளும் ஓர் ஒருமித்த கருத்துக்கு வந்து ஓர் அரசாங்கத்தை அமைக்க தயாராகும்வரை தான் பதவியிலிருப்பேன் என்பதை மறைமுகமாக சொல்லியிருக்கிறார்.

யார் என்ன சொன்னாலும், ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினால் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க தாங்கள் தயார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமல்ல, மூன்று உறுப்பினர்களை மாத்திரம் கொண்டுள்ள ஜேவிபியும்கூட சொல்லியிருக்கின்றது.

அப்படியெனில், இந்த இரண்டு பேரில் ஒருவரோ அல்லது இருவரும் சேர்ந்தோ ஆட்சி அமைக்க தயாராகலாம். அல்லது, அனைத்துக் கட்சிகளும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்து, ஒரு சர்வகட்சி அரசை - இடைக்கால அரசை அமைக்க முதலில் தங்களுக்குள் பொது இணக்கத்திற்கு வரலாம். அவ்வாறு வந்தால் மட்டுமே இன்றைய சிக்கலில் இருந்து நாடு வெளியே வரமுடியும்.

கோட்டா வீட்டுக்குப் போ என்று மட்டுமே இதுவரை கோசமிட்டுக்கொண்டு இருந்தோம். இப்போது, அவர் போக தயாராகிவிட்டார். ஆனால், அவர் போன பின்னரும் ஓர் அரசியல் நெருக்கடி ஏற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகக் குறைந்தது ஓர் ஆறுமாதத்திற்காகவது ஓர் அனைத்துக்கட்சி அரசாங்கம் நாட்டுக்கு அவசியம். அதன் பின்னர் யாரை தெரிவுசெய்வது என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். அதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை அனைத்து கட்சிகளும் எதிர்கொள்ள தயாராக வேண்டும்.

இப்போது தேவை, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு தற்காலிக அரசை அமைப்பதே. பொதுஜன முன்னணியிலிருந்து பலர் வெளியேறி சுயாதீனமாக இயங்குகின்றபோதிலும் அதனோடு இன்னமும் இருப்பவர்கள் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. அனைத்துக்கட்சி என்கின்றபோது, அதில் அவர்களும் இடம்பெறுவார்களா? அல்லது அவர்கள் இல்லாமல் அனைத்து எதிர்க்கட்சிகளுமா என்பதும் தெரியவில்லை.

இதேவேளை, பத்து உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அமைகின்ற அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் எல்லாம் தமிழர் பிரச்னைக்கு தீர்வை முன்வைத்து, அதனை எழுத்தில் சமர்ப்பித்தால் தாம் வெளியிலிருந்து அந்த அரசுக்கு ஆதரவை வழங்கலாம் என்று தெரிவித்திருக்கின்றது.

இனி அடுத்த ஆட்டம், எதிர்க்கட்சிகளின் கைகளில்தான் இருக்கின்றது!

- ஊர்க்குருவி

# மக்களுக்கான ஆட்சியே இனிமேல் மலரவேண்டும்

## சமூக செயற்பாட்டாளர் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை. 11**

**இனிவரும் ஆட்சி மக்களுக்கான ஆட்சியாக இருக்கவேண்டுமே தவிர நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி ஆட்சியாக இருக்கக்கூடாது என கோட்ட கோ கம செயற்பாட்டாளரும் முன்னணி நடிகருமான பீட்டர் டல்மெடா தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சிக்காரரர்களின் செயற்பாடு தொடர்பில் நான் இரண்டு நிமிடத்தில், இரண்டு விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

நாங்கள் அதாவது இந்த கோட்ட கோ கம போராட்டக்காரர்கள் இளைஞர்கள் அனைவரும் போராடியது கோட்டாபய வெளியில் செல்லவேண்டும் என்பதற்காகவே.

இன்றைக்கு தோற்றுப் போன ஒரு அரசாங்கத்தின, பாராளுமன்றத்தின் சபாநாயகர் கட்சித் தலைவர்களை கூட்டத்துக்கு அழைத்துள்ளார். இந்த கலந்துரையாடலில் கட்சித் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து கோட்டாபய வெளியில் செல்ல வேண்டும் என தீர்மானம் எடுப்பார்களாம். இது ஒரு நகைச்சுவையான விடயம்.

இது உங்களால் முடியாத விடயம் என்பதால் தான் மக்கள் அனைவரும் இணைந்து இதை செய்துள்ளனர். இந்த நேரத்தில் நீங்கள் இவ்வாறு நகைச்சுவையாக நடந்து கொள்வது தவறான செயல். இது மக்களின், இளைஞர்களின் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் செயலாக தான் நான் பார்க்கிறேன்.

இரண்டாவது விடயம் நாங்கள் கோட்டாபயவை வெளியே போக சொல்லும் அதேநேரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும் ஒழிக்க சொல்கிறோம். இது மக்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டுமே தவிர நிறைவேற்று ஜனாதிபதி முறைமை உடையதாக இருக்க கூடாது. இந்த விடயங்களில் நாங்க தெளிவாக இருக்கின்றோம். இவை இரண்டும் தான் எங்களுக்கு முக்கியம்-என்றார்.

(அ)

# ஜனாதிபதி செயலகத்துக்குள் 'கோட்டா கோ கம' நூலகம்!

கொழும்பு, ஜூலை. 11

ஜனாதிபதி செயலக வளாகத்தில் 'கோட்டா கோ கம' நூலகத்தினை நிறுவ கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மே 9 ஆம் திகதி முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு பேரணியாக வந்து, நூலகம் உள்ளிட்ட அனைத்தையும் தீயிட்டு நாசப்படுத்தினர்.

புதிதாக நிறுவப்பட்டுள்ள 'கோட்டா கோ கம' நூலகம் ஜனாதிபதி செயலக வளாகத்திற்கு கொண்டு செல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கணக்கான நூல்கள் ஏற்கனவே ஜனாதிபதி செயலகத்திற்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

போராட்டம் இன்னும் முடிவடையவில்லை என்றும், கொழும்புக்கு வரும் அனைவரும் முடிந்தால் ஒரு புத்தகத்தை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

## பொலிஸ் காவலரண் மீது தாக்குதல்

வவுனியா, ஜூலை. 11

வவுனியா பூந்தோட்டம் பொலிஸ் காவலரன் இனந் தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் பொலிஸார் எவரும் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை என கூறப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அமெரிக்காவில் கோட்டாவின் மகனின் வீடும் முற்றுகைக்குள்



கொழும்பு, ஜூன். 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதல்வர் மனோஜ் ராஜ பக்ஷவின் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள வீட்டுக்கு எதிரில் இலங்கையர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம் திகதி கட்டாயம் பதவி விலகவேண்டும் என அழுத்தம் கொடுத்து இவர் கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அவரது குடும்ப உறுப்பினர்கள் அமெரிக்காவில் வீடுகளைக் கொள்வனவு செய்ய எப்படி பணம் கிடைத்தது என்பது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் இலங்கையர்கள் என்ற வகையில் அந்த பணத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

இதனிடையே சுவீடன் பாராளுமன்றத்திற்கு அருகில் ஜனாதிபதி கோட்டாபய உட்பட அரசாங்கம் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி இலங்கையர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## பிரதமரின் இல்லத்திற்கு தீ; பொலிஸாரால் மூவர் கைது

கொழும்பு, ஜூலை. 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யா-எல, காலி மற்றும் கல்கிஸை பகுதியைச் சேர்ந்த 19, 24 மற்றும் 28 வயதுடையவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.07.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆணி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அந்த ஜூலையை நினைவுக்கு வருகின்றது!

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் உச்ச நிலையை அடைந்திருக்கின்றது. கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக இணங்கியிருக்கின்றார். இன்னும் ஒரு சில தினங்களில் புதிய அரசாங்கம் தொடர்பான இணக்கப்பாட்டை எட்டியே ஆகவேண்டும். வேறு எந்தவொரு தெரிவுகளும் இல்லை. தெற்காசிய அரசியல் வரலாற்றில், சர்வாதிகார ஆட்சியாளர்களை மக்கள் விரட்டியடித்தனர் என்னும் அரசியல் வரலாறு இலங்கையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆட்சியாளர்கள் தவறான பாதையில் பயணிக்கின்ற போது, மக்கள் எதிர்ப்புக்கள் தவிர்க்க முடியாதவை. அதுதான் தற்போது இலங்கைத் தீவிலும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் மறுபுறமாக இவ்வாறான ஜனநாயக போராட்டங்களின் போது, சொத்துக்களுக்கு தீ வைப்பதை, எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடும் போராட்டங்களின்போது, ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் முற்றாக எரியூட்டப்பட்டிருக்கின்றது. இதனை சிலர் வரவேற்பதையும் காண முடிகின்றது. ஒரு பொறுப்பான ஊடகம் என்னும் வகையில் நாம் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். இது போன்ற செயற்பாடுகள் ஜனநாயக ரீதியான போராட்டங்களின் மகத்துவத்தை மழுங்கடித்துவிடும். இவ்வாறான தீ வைக்கும் சம்பவங்கள் மறுபுறமாக, தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள அத்துமீறல்களை நினைவூட்டுகின்றது.

இதே ஜூலை மாதம் கொழும்பின் பல பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சொந்தமான உடைமைகள் எரியூட்டப்பட்டன. ஓரிரவில் தமிழ் மக்கள் தெற்கிற்கு அந்நியர்களாக்கப்பட்டனர். இப்போது ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக் கட்சிதான், அப்போது ஆட்சியிலிருந்தது. அப்போதைய ஆட்சியாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமிழின விரோதக் காடையர்களை அடக்குவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவில்லை. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இப்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீயில் கருகியதை காணும்போது, அதனை நாம் ஆதரிக்கவில்லை. ஏனெனில் எந்தவொரு பிரச்னைக்கும் அழித்தொழிப்பு தீர்வல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் தரப்புக்களும், ராஜபக்ஷக்களை அகற்றும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். ஆனால் சொத்துக்களைச் சேதமாக்கும் வன்முறைகளை தூண்டிவிடும் மனோபாவத்தை தமிழர்கள் ஒருபோதுமே ஆதரிக்கவில்லை. ஏனெனில், இதே போன்ற சிங்கள மனோபாவத்தின் வலியை தமிழ் மக்கள் ஏற்கனவே போதியளவு அனுபவித்திருக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இருந்த நூலகம் சாம்பலாகிய செய்தியை கேட்கும் போது, யாழ்ப்பாண நூலகம், ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளின் தூண்டுதலினால், தீ வைக்கப்பட்ட விடயமே, எம் கண்முன் நிழலாடுகின்றது. தமிழ் மக்களுக்கு நடந்தவைகள், சிங்களவர்களுக்கும் நடக்க வேண்டுமென்னும், தீயூட்டும் மனோபாவம் தமிழர்களிடம் இல்லை.

தமிழர்களிடம் நியாயமான அரசியல் கோரிக்கைகள் இருக்கின்றன. அதில் தமிழ் மக்களிடம் சமரசங்கள் இல்லை ஏனெனில் அது சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. வடக்கு -கிழக்கு பகுதியில் தமிழ் மக்களை பலவீனப்படுத்த வேண்டுமென்னும் தீய எண்ணத்துடன் திடமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்த மக்களை வெளியேற்றவேண்டுமென்று இப்போது எந்தவொரு தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்களும் வாதிடவில்லை. இனியாவது குடியேற்றங்களை தடுத்து நிறுத்துங்கள், இனியாவது, புத்த கோவில்கள் மூலம் புதிய மேலாதிக்கத்தை திணிப்பதை நிறுத்துங்கள் என்றுதான் தமிழ் மக்கள் கோருகின்றனர்.

1983 கறுப்பு ஜூலையை தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை ஆனால் அதே போன்றதொரு ஜூலை சிங்கள மக்களும் அனுபவிக்கவேண்டுமென்று தமிழ் மக்கள் வாதிடவில்லை. தீ வைக்கும் சிங்கள மனோபாவம் தவறானது. அது சிங்களவர்களுக்கு எதிரானதாக இருந்தாலும் அது தவறானதுதான்.

# கோட்டாபயவுக்கு எதிராக எதிரொலித்த ஆங்கில தாரக மந்திரம் ‘Gota Go Home’

- அலசுவது இராஜதந்திரி -



*இலங்கையில் சிங்கள மட்டுமே சட்டம் கொண்டுவரப்பட்ட போது காலிமுகத்திடலில் தமிழ் அரசியல் வாதிகள் சத்தியாகிரகம் இருந்தனர். 1958-ம் ஆண்டு இச்சத்தியாகிரகம் இடம்பெற்றபோது சத்தியாகிரகிகள் விரட்டியடிக்கப்பட்டனர்.*

*ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுபட்டு சிங்கள மொழியை முதன்மைப்பத்தும் விதத்திலேயே தமிழையும் புறக்கணித்து சிங்களம் மட்டுமே சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தது.*

*ஆங்கிலம் கடந்த பல தசாப்தங்களாக வழக்கொழிந்து தற்போது ஜனாதிபதி உட்பட கொழும்பில் மட்டுமல்ல. நாடளாவிய ரீதியில் உயர் பதவிவகிப்போரும் போதியளவு ஆங்கில அறிவற்றுள்ளனர். தமது கடமை களைப்புரிவதில் சிங்களப்பகுதிகளிலிருப் போர் சிங்களத்திலும், தமிழ் பகுதிகளிலிருப் போர் தமிழிலும் தமது பணிகளைப்புரிந்து வருகின்றனர். ஆங்கிலம் படசாலைகளில் ஒரு பாடமாக போதிக்கப்படுகின்றது. ஆயினும் அம்மொழியின் முக்கியத்துவம் இலங்கையில் பெரிதும் குறைவடைந்துள்ளது.*

*இருந்த போதிலும் கடந்த மூன்று மாதங்களாக இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் மிகப்பலமாகவே ஆங்கிலத்தில் ஒலித்து வந்த கோஷமாகவே கோட்டா கோ ஹோம் என்ற கோஷம் விளங்கியிருந்தது.*

*கொழும்பு காலிமுகத்திடலில் ஆக்ரோஷமாக ஒலிக்க ஆரம்பித்த கோட்டா கோ ஹோம் என்ற ஆங்கில கோஷம் தற்போது இலங்கையின் சிங்கள-பௌத்தர்களின் தலைவன் என்று கூறிவந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்ற மக்கள் எழுச்சியையடுத்து புறமுதுகு காண வைத்துள்ளது.*

*சிங்களத்திலோ அல்லது தமிழிலோ அக்கோஷத்தை கூறாது ஆங்கிலத்தில் கூறியதன் காரணமென்னவெனில் உச்சரிப்பு லாவகமாக வாயிலிருந்து வரவேண்டுமென்ற காரணத்தினாலும் பட்டி தொட்டியெல்லாம் இலகுவில் கூறக்கூடியதாக இருக்க வேண்டுமென்ற காரணத்தினாலுமே கடந்த மூன்று மாதங்களாக ஒரு தாரக மந்திரமாகவே கோட்டா கோ ஹோம் என்ற கோஷம் ஆங்கிலத்தில் கூறப்பட்டு வந்திருந்தது.*

*இறுதியில் அக்கோஷத்தின் உச்சாடனம் ஏற்படுத்திய வலிமையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவர் சார்ந்தோரையும் மண்கவ்வ வைத்துள்ளது.*

*இலங்கையில் அதிதீவிர பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதி செயலகம், அதனை அண்டிய பகுதிகளான மத்திய வங்கி கட்டடம் அதற்கப்பாலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் என்பவற்றை உள்ளடக்கிய பகுதிகள் விளங்குகின்றன.*

*நேற்று முன்தினம் கோட்டா கோ கம என்று பெயரிடப்பட்டு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கற்பனைக்கிராமத்திலிருந்து சாத்வீகத்துக்கும் ஓர் எல்லையுண்டு என்று கருதுமளவுக்கு வெளிப்பட்ட ஆர்ப்பாட்டமே ஒரு போராட்டமாக மாற்றங்கண்டு கொழும்பு மாநகரை தலைகீழாக மாற்றிவிட்டிருந்தது.*

*நேற்று முன்தினம் காலையிலிருந்தே தென்னிலங்கையின் நாலாபுறங்களிலிருந்தும் மக்கள் போக்குவரத்து சிரமங்களுக்கு மத்தியிலும் காலிமுகத்திடலை நோக்கி வந்த வண்ணமிருந்தனர். இதுதவிர நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தம் ரயில்வண்டிகள் நிரம்பி வழியுமளவுக்கு மக்களின் வருகை கொழும்பு நோக்கி வருவதாக இருந்தது.*

*இத்தருணத்தில் பாதுகாப்பு படையினரது பிரசன்னமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆரம்பத்தில் ஜனாதிபதி செயலகத்தில் படையினரது வியூகங்களை ஊடறுத்தவர்களாக பிரவேசித்தனர். இதனையடுத்து ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை தம்வசப்படுத்தினர்.*

*இலங்கையிலுள்ள பாரம்பரிய புராதன கட்டடங்களில் முக்கியமானதே ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமாகும்.*


*1505ஆம் ஆண்டு ஒரு தேவாலயமாக ஆரம்பத்தில் போர்த்துக்கேயர்களால் அமைக்கப்பட்டதே இன்றைய ஜனாதிபதியின் வாசஸ்தலம். இதன்பின்னர் ஜனாதிபதி இல்லம் ஒல்லாந்தர் வசமானது. இதனையடுத்து 1782ஆம் ஆண்டு ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் அந்த இல்லத்தை கைப்பற்றினர். பெரிதும் ஒல்லாந்து, ஆங்கிலேய கட்டடக் கலையம்சங்களை கொண்டதாக இந்த மாளிகை விளங்குகின்றது.*

*1804 இந்த இல்லம் பிரிட்டிஷாரினால் அரசுடமையாக்கப்பட்டது. அன்று முதல் இலங்கையின் 29 மகாதேசாதிபதிகள், ஆறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இம் மாளிகை இருந்துவந்துள்ளது.*

*அதி உயர் பாதுகாப்புவலயத்தில் மாண்போடு உலகத்தலைவர்கள் பலரதும் பாதங்கள் பதிந்த இந்த அழகிய மாளிகை கோட்டா கோ ஆர்ப்பாட்டக்காரர்களது வாசஸ்தலமாக தற்போது மாற்றங்கண்டுள்ளது. இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பிலுள்ள பிரத்தியேக இல்லமும் தீயிட்டுக்கொழுத்தப்பட்டுள்ளது. அங்கே இருந்த ஏராளமான பெறுமதி மிக்க சேகரிப்புகள் தீக்கிரையாகியுள்ளன.*

*நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களுடன் கூடிய கலவரத்தை நோக்கும் போது மக்கள் சக்தி ஒரு மாபெரும் சக்தி மட்டுமல்ல. ஓர் அசுர சக்தி என்பதுவும் நிரூபணமாகியுள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



| | |
|---|---|
| ஜூலை - 11 | திங்கட்கிழமை |
| சுபகிருது வருடம் - | ஆனி 27 |
| நல்ல நேரம் : | 06.00 - 07.30 |
| ராகு காலம் : | 07.30 - 09.00 |
| திதி : | திரையோதசி |




**மேடம்**
செயல்களில் இழுபறியான நிலை உண்டாகும். மனக்குழப்பம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வேண்டாம். அமைதி காப்பது நன்மை தரும். வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**இடபம்**
திருமண பேச்சு வார்த்தை சாதகமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். வீட்டை புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலை ஆட்களை மாற்றுவீர்கள். வருமானத்தில் இருந்த தடை அகலும். பிறருக்காக உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.

**கடகம்**
குடும்ப பிரச்னை தீரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். புதிய முயற்சி அனுகூலமாகும். விலகிச்சென்ற உறவுகள் மீண்டும் வருவர். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை காண்பீர்கள்.

**சிம்மம்**
விருப்பமான ஒருவரை இன்று சந்திப்பீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். வியாபார நுணுக்கங்களை தெரிந்து கொண்டு செயல்படு வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி**
சொத்துப் பிரச்னை உங்களுக்கு சாதகமாகும். உங்கள் செயல்கள் லாபமாகும். துணிச்சலாக செயலபட்டு வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையைக் கையாளுவீர்கள்.

**துலாம்**
இரண்டு நாளாக இருந்து வந்த சங்கடம் விலகும். மகிழ்ச்சி கூடும். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னை விலகும். கோயில் தரிசனம் மேற்கொள்வீர்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருட்சிகம்**
மனதில் தேவையற்ற சிந்தனை உண்டாகும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். சிலர் உங்களைக் குறை சொல்வார்கள். அதற்கு பதில் சொல்ல வேண் டாம். குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு**
வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். எதிர்கால நலனை கருதி முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். செலவு கூடும். கேளிக்கை, சந்தோஷம் என்று செலவுகள் செய்வீர்கள்.

**மகரம்**
நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். புதிய பொறுப்பு வந்து சேரும். பிறர் பாராட்டும்படி செயல்படுவீர்கள். வியாபாரத்தை விருத்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்**
பொது நலனில் கவனம் செல்லும். உங்களின் செல்வாக்கு உயரும். கூட்டு வியாபாரத்தில் ஆதாயம் கூடும். புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். பிறருக்காக உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.

**மீனம்**
இரண்டு நாளாக இருந்து வந்த நெருக்கடி விலகும். மனநிம்மதி உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளாக திட்டமிட்டிருந்த ஒரு வேலையை இன்று செய்து முடிப்பீர்கள்.

# தமிழகத்தில் தற்போதைக்கு முழு ஊரடங்கு அமுலாகாது

*சென்னை, ஜூலை. 11*

தமிழகத்தில் தற்போதைக்கு முழு ஊரடங்கு அமல்படுத்தவேண்டிய அவசியமில்லை என, தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்து உள்ளார்.

தமிழகத்தில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை, கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, தலைநகர் சென்னை, கோவை, செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில், கொரோனா பரவல் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து வருவது, அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதை அடுத்து, பொது இடங்கள், அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில், பொது மக்கள் கட்டாயம் முகக்கவசம், சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்றும், மீறுவோருக்கு 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று, தமிழகம் முழுவதும் 1 லட்சம் சிறப்பு மெகா கொரோனா தடுப்பூசி முகாம்களில் கொரோனா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாநகராட்சி பள்ளியில் கொரோனா தடுப்பூசி முகாமை, சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழகத்தில் தற்போது கொரோனா ஊரடங்குக்கு அவசியமில்லை என்றும், தமிழகத்தில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை மிக குறைவு என்றும், தனியார் மருத்துவமனைகளில் விரைவில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (அ)

# தமிழகத்தில் மீண்டும் பள்ளிகள் மூடல்?

*சென்னை, ஜூலை. 11*

தமிழகத்தில், கொரோனா பரவல் அதிகரித்து வருவதால், பள்ளிகள் மீண்டும் மூடப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, தலைநகர் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில், கொரோனா பரவல் மீண்டும் வேகம் எடுத்துள்ளது. இதை அடுத்து, பொது இடங்களில் பொது மக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்றும், இதை மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் தமிழக சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் நீண்ட நாட்களுக்கு பிறகு, கொரோனா தினசரி பாதிப்பு 2 ஆயிரத்து 500-ஐ தாண்டி உள்ளது. இதில் சென்னையில் மட்டும் கொரோனா பாதிப்பு 1,000 ஆக உள்ளது. மேலும், கொரோனா தினசரி பாதிப்பு எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது.

இந்நிலையில், கொரோனா பரவல் அதிகரித்து வருவதால், தமிழகத்தில் பள்ளிகள் மீண்டும் மூடப்படுமா என்ற அச்சம் எழுந்துள்ளது. கொரோனா காலக் கட்டத்திற்கு பிறகு, அதாவது, சுமார் 2 ஆண்டுகளுக்கு பிறகு பள்ளிகள் வழக்கம் போல் திறக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில், தற்போது, மீண்டும் கொரோனா பரவல் உயர்ந்து வருவது, பெற்றோர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஒரு சில தனியார் பள்ளிகள், கொரோனா காலத்தில் பள்ளிகளில் சுழற்சி முறை வகுப்புகளை நடத்தியது போல், மீண்டும் நடத்தலாமா என்பது குறித்து பெற்றோர்களிடம் கருத்துக்களை கேட்டுள்ளது. இது குறித்து விரைவில் கருத்துக்களை தெரிவிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதற்கிடையே, கொரோனா நோய் பரவல் தொடர்ந்து அதிகரித்து கொண்ட செல்லும் பட்சத்தில், தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் மீண்டும் ஆன்லைன் வாயிலாக வகுப்புகளை நடத்துவது குறித்தும் தனியார் பள்ளிகள் பரிசீலித்து வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. (அ)

# ஜெயலலிதாவின் சொத்துகளில் பங்கு கேட்டு முதியவர் வழக்கு

*சென்னை, ஜூலை. 11*

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணன் என கூறி, அவரது பாதி சொத்துகளை கேட்டு மைசூரை சேர்ந்த என். ஜெ.வாசுதேவன் (வயது-83) என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அந்த மனுவில், ஜெயலலிதாவின் தந்தை ஜெயராமின் முதல் மனைவிக்கு தான் பிறந்ததாக தெரிவித்துள்ள வாசுதேவன், தனது தந்தை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட வேதவல்லி மூலம் பிறந்த ஜெயக்குமாரும், ஜெயலலிதாவும் தனது சகோதரர் சகோதரி எனவும், ஜீவானம்சம் கேட்டு மைசூரு நீதிமன்றத்தில் தனது தாய் ஜெயம்மா தொடர்ந்த வழக்கில், வேதவல்லி, ஜெயக் குமார், ஜெயலலிதா ஆகியோர் எதிர் மனுதாரராக இருந்துள்ளனர்.

ஜெயலலிதாவின் சொத்துகளில் 50 சதவீதம் தர வேண்டும். தீபக், தீபா ஆகியோர் மட்டுமே ஜெயலலிதாவின் வாரிசுகள் என சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் திருத்தம் செய்ய வேண்டும் எனக்கூறியுள்ளார். (அ)

# பழனிசாமி, பன்னீர்செல்வம் தனித்தனியே ஆலோசனை

அ.தி.மு.க., பொதுக்குழு குறித்த வழக்கில் இன்று தீர்ப்பு வர உள்ள நிலையில், பழனிசாமி, பன்னீர்செல்வம் ஆகியோர் தனித்தனியே தங்களது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

அ.தி.மு.க.,வில் தற்போது உள்ள இரட்டை தலைமையை ரத்து செய்து, ஒற்றைத் தலைமையை அமல்படுத்தி, கட்சியின் பொதுச் செயலர் ஆவதற்காக, முன்னாள் முதல்வர் பழனிசாமி காய்களை நகர்த்தி வருகிறார். அவருக்கு 95 சதவீத நிர்வாகிகள் ஆதரவு தெரிவித்து உள்ளனர். இதற்கு, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். சென்னையில் நாளை பொதுக்குழுவை கூட்டி, தற்காலிக பொதுச்செயலராக பழனிசாமியை தேர்வு செய்ய முடிவு செய்து, பொதுக்குழுக் கூட்டத்திற்கு, அவரது ஆதரவு தரப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் வழக்கு தொடர்ந்தார். பொதுக்குழு உறுப்பினரான வைரமுத்து





என்பவரும், தடை கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு, நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன் விசாரணைக்கு வந்தது.

கடந்த இரு தினங்களாக, இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைத்தனர். இந்த வழக்கில், நாளை காலை 9:00 மணிக்கு உத்தரவு பிறப்பிப்பதாக, நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி அறிவித்துள்ளார். இதனால், இரு தரப்பிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து இருவரும் தனித்தனியே ஆலோசனை நடத்தினர்.

# ஜனாதிபதி மாளிகைப் பணத்துக்காக மிரட்டல் விடுத்த பொலிஸ் அதிகாரி

## அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்க கோரினார்

கொழும்பு, ஜூலை. 11

ஜனாதிபதி மாளிகையில் கைப்பற்றிய பணத்தை, அண்மைக்காலமாக சர்ச்சைகளை ஏற்படுத்தி வரும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் பொலிஸ் துறை அமைச்சரிடம் ஒப்படைக்குமாறு மிரட்டியுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் பிரவேசித்ததையடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ தங்கியிருந்ததாகக் கூறப்படும் அறையின் அலுமாரியில் இருந்து ஒரு கோடியே 78 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை பல்கலைக் கழக மாணவர்கள் குழு ஒன்று கண்டெடுத்தது.

அந்தப் பணத்தை ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புப் பணியில் இருந்த சிறப்பு அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசேத பெர்னாண்டோ என்ற அதிகாரியிடம் ஒப்படைக்க பல்கலைக் கழக மாணவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அங்கு அவர் அந்தத் தொகையை ஏற்க மறுத்ததுடன், பிரதம பொலிஸ் பரிசோதகர் சாகர லியனகேவுக்கு அறிவித்தனைத் தொடர்ந்து, சாகர லியனகே உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அங்கு சென்றனர்.

பணம் கிடைத்த இடத்தை காணொலியாக பதிவு செய்த பொலிஸார், ஐந்து மாணவர்களிடம் வாக்குமூலங்களை பெற்று பணத்தையும் தமது பொறுப்பில் எடுத்துச் சென்றனர்.

இந்த பணம் தொடர்பான உண்மைகளை நீதிமன்றத்தில் தெரிவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், சர்ச்சையை ஏற்படுத்தி வரும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் திடீரென கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அழைத்து, பொலிஸ் புத்தகத்தில் பதியாமல் அந்தப் பணத்தை பொலிஸூக்கு பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கு கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி மறுத்ததாகவும் பொலிஸ் உயரதிகாரியான "நான் சொன்னதைச் செய்" என்று அவரை மிரட்டியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த உயர் அதிகாரி அவ்வாறு உரையாடி மிரட்டியுள்ளதாக பொலிஸ் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், பொலிஸ் தலைமையகத்துக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபருடன் கலந்தாலோசிக்காமல் வெளியாட்கள் எவருக்கும் பணத்தை வழங்க வேண்டாம் என்று பொலிஸ் தலைமையகத்தில் இருந்து கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி பதவி விலகாவிடின் நாடு தழுவிய வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை. 11

எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகாவிட்டால், அறிவித்தல் இன்றி வேலைநிறுத்தம் மற்றும் முழு கடையடைப்பில் ஈடுபடப் போவதாக நேற்று தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்க காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார். (அ)

# பொலிஸ் உயர் அதிகாரிகள் மேல் மாகாணத்தில் கூட்டம்

கொழும்பு, ஜூலை. 11

மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று மேல் மாகாணத்தின் அனைத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்களையும் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக தொடர்பு கொண்டு, கொழும்பின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், வீதித் தடைகளுடனான பாதுகாப்பை பலப்படுத் ஸ்ரீதுமாறு பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் தற்போது ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையை ஆக்கிரமித்து போராட்டம் நடத்துபவர்கள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் மேல்மாகாண பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள விடுதியில் தங்கியிருந்து இந்த உத்தரவுகளை வழங்குவதாக பொலிஸ் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# எரிவாயு விலை 50 ரூபா உயரும்

கொழும்பு, ஜூலை. 11

எதிர்காலத்தில் எரிவாயு சிலிண்டரின் விலையை 50 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை சுமார் 200 ரூபாவினால் அதிகரிக்கப்படவேண்டிய போதிலும், மக்கள் படும் இன்னல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி 50 ரூபாவினால் மட்டுமே விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி மாளிகையில் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ள போராட்டக்காரர்கள்!

கொழும்பு, ஜூலை. 11

நேற்று முன்தினம் கொழும்புக்கு சென்ற மக்கள் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகிலேயே தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

நேற்று முன் தினம் முற்பகல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் பொலிஸ் தடைகளை மீறி ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றை முற்றுகையிட்டனர்.

அத்துடன் அலரிமாளிகைக்குள்ளும் சென்றிருந்தனர்.

நேற்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் களனி பல்கலைக் கழகத்திலிருந்து ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத்திருந்தது. அவர்கள் கொழும்பு கோட்டை பகுதியில் இரவு முழுவதும் தங்கினர்.

இந்தநிலையில் நேற்று முன் தினம் போராட்டத்தில் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் இரண்டு பொலிஸாரும் அடங்குகின்றனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வர்களில் இருவர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# கரு ஜயசூரியவை பாராளுமன்றம் செல்ல வைப்பதற்கு தீவிர முயற்சி!

கொழும்பு, ஜூலை. 11

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை மீண்டும் பாராளுமன்றம் வர வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று அறியமுடிகின்றது.

இதற்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைத் துறப்பதற்கு மயந்த திஸாநாயக்க தயாராகவே இருக்கின்றார் என்று தெரியவருகின்றது.

நவீன் திஸாநாயக்க, கரு ஜயசூரியவின் மருமகன். அவரின் தம்பியே மயந்த திஸாநாயக்க. இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி. என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறந்தவுடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைக்கால ஜனாதிபதியாகவேண்டும், 30 நாட்களுக்கு முன்பாகவே பாராளுமன்றம் பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும் என்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊடகவியலாளர்களை தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை என்கிறது பொலிஸ்!

கொழும்பு, ஜூலை. 11

பிரதமரின் இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தாக்கிய பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசேட விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தென்னிலங்கையின் பிரபல ஊடகங்கள் இரண்டினைச் சேர்ந்த ஊடகச் செயற்பாட்டாளர்கள் ஆறு பேர் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதமர் வீட்டுக்கு தீயிட்ட சம்பவம் விசாரணைகள் சி.ஐ.டியின் கையில்!

கொழும்பு, ஜூலை. 11

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்கு நேற்று தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்கு நேற்று முன் தினம் தீ வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கல்கிஸை, காலி மற்றும் ஜா - எல பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைதாகியிருந்தனர்.

இந்நிலையிலேயே, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)



# படைத்தரப்புக்கு ஆதரவளிக்க கோருகிறார் சவேந்திர சில்வா



கொழும்பு, ஜூலை. 11

நாட்டில் அமைதி பேணப்படுவதை உறுதி செய்வதற்கு அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பு தரப்பினருக்கு ஆதரவளிக்குமாறு பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற மாபெரும் போராட்டத்தின் தொடராக கடந்த இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

முப்படைத் தளபதிகளும் குறித்த சந்திப்பில் பங்குகொண்டனர்.

# விவசாய அமைச்சரும் பதவி விலகுகின்றார்!

கொழும்பு, ஜூலை. 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் திகதியை அறிவித்துள்ள நிலையில் தாமும் பதவி விலகுவதாக அறிவித்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

தற்போது விவசாய மற்றும் வனவிலங்கு, வன வளங்கள் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் தானும் பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இறக்குமதியாகும் உரத்தினைப் பொறுப்பேற்றுக் கையளித்த பின்னர் தான் பதவி விலகவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

முன்னதாக பந்துல குணவர்த்தன, மனுஷ நாணயக்கார, ஹரீன் பெர்னான்டோ ஆகியோரும் பதவி விலகல் குறித்து அறிவிப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தம்மிகவும் விலகினார்



கொழும்பு, ஜூலை. 11

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக தம்மிக்க பெரேரா நேற்று அறிவித்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பொதுஜன பெரமுன சார்பில் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக அவர் கடந்த ஜூன் 24 ஆம் திகதி அவர் பதவியேற்றார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியை அடுத்து சர்வகட்சி அரசு அமைக்க வழிவிட்டு பதவி விலக ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தீர்மானித்துள்ள நிலையில் அமைச்சு பொறுப்பில் இருந்து விலகுவதாக தம்மிக்க பொரோரா அறிவித்துள்ளார். (அ)

# எரிவாயு கப்பல் வந்தது

## 12 ஆம் திகதி முதல் விநியோகம்

கொழும்பு, ஜூலை. 11

3700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது.

குறித்த கப்பல் நேற்று மாலை கெரவலப்பிட்டியவை சென்றடைந்தது. அங்கு எரிவாயுவை இறக்கும் பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று 3,740 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய இரண்டாவது கப்பல் வருகை தரவுள்ளது.

அத்துடன் 3,200 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மூன்றாவது கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், ஜூலை 12 ஆம் திகதி முதல் எரிவாயு விநியோகம் முறையாகவும் சீராகவும் இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் வீடுகளுக்கான எரிவாயு தேவை தொடர்பான பிரச்னை முற்றிலும் தீர்க்கப்படும் என லிட்ரோ நிறுவன தலைவர் முதித்த பீரிஸ் கூறியுள்ளார். (அ)

# விமான நிலையம் ஊடாக தப்பியவர் கோட்டா அல்லர்

## சிங்கள இணையத்தளம் தகவல்

கொழும்பு, ஜூலை. 11

**பொதுமக்களின் எழுச்சியினையடுத்து ஜனாதிபதி மாளிகையினை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டு தப்பியோடியதாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகள் பொய்யானவை என்று சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக அந்த இணையத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், விமானம் ஒன்றிற்கு அருகில் பல ஆடம்பர கார்கள் செல்லும் காணொலியை வெளியிட்டு, கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதாக சமூக ஊடகங்கள் நேற்று முன் தினம் சனிக்கிழமை வெளியிட்டன.

எனினும் இது தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தியாவுக்கு சென்றிருந்த பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, தனது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி வந்திருந்த விமானம் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு அவருடன் செல்வதற்காக பல வாகனங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் வந்ததாகவும் அதன் காட்சிகளே சமூக வலைத்தளங்களில் பரவியதாகவும் தெரியவந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சஜித் பிரேமதாஸவை ஏன் பிரதமராக நியமிக்கவேண்டும்?

## ராஜித சேனாரத்ன விளக்கம்

கொழும்பு, ஜூலை. 11

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் இருந்து விலகிய பின்னர் எதிர்க் கட்சித் தலைவரை மாற்று பிரதமராக நியமிப்பது ஏன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன விளக்கம் அளித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது: -

பாராளுமன்ற மரபுப்படி எதிர்க்கட்சித் தலைவரே மாற்றுப் பிரதமராக வரவேண்டும்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய அரசாங்கத்தை அமைத்து



மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண எதிர்பார்க்கின்றோம்.

தற்போதைய நெருக்கடியை பாராளுமன்றத்தின் மூலம் முடிவுக்கு கொண்டு வரவேண்டும். நாட்டில் அராஜகம் ஏற்பட்டால், ஆப்கானிஸ்தான், சூடான், துனிசியா போன்று மாறும்-என்றார். (அ)

# ரயில் கட்டணம் உயராது

கொழும்பு, ஜூலை. 11

இன்று நள்ளிரவு முதல் அமுலாகவிருந்து ரயில் கட்டண அதிகரிப்பு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ரயில் கட்டணங்களை அதிகரிக்க முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்காக அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, ரயில் கட்டண அதிகரிப்பு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ரணிலின் இல்லத்துக்கு தீ வைத்தோர் யார் என்பதை அம்பலப்படுத்துவோம்

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை. 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு தீ வைத்தவர்கள் யார் என்பதை அம்பலப்படுத்துவோம் என ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

போராட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்ட மோசமான சம்பவமே இந்த தீ வைப்பு சம்பவம் என தெரிவித்துள்ள அவர், இதன் பின்னணியில் தனியார் ஊடக நிறுவனம் ஒன்றும் அரசியல் கட்சி ஒன்றும் உள்ளது என்று கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எனவே இதனுடன் தொடர்புடையவர்கள், அவர்களின் அரசியல் பின்னணி உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் சாட்சிகளுடன் எதிர்வரும் வாரங்களில் அம்பலப் படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# ஹரீன் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார இருவரும் அமைச்சுப் பதவியை துறந்தனர்

கொழும்பு, ஜூலை. 11

அரசியல் நெருக்கடிநிலையால் மூத்த அமைச்சர்கள் பதவி விலகிய நிலையில் புதிய அமைச்சரவையில் அங்கம் பெறுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து பதவி ஏற்ற அமைச்சர்கள் ஹரீன் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகிய இருவரும் தாம் இராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளனர்.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சராக அமைச்சராக ஹரீன் பெர்னான்டோவும், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராக மனுஷ நாணயக்காரவும் கடந்த ஐந்தாம் மாதம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டிருந்தனர்.

இதனிடையே,

ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் அமைச்சுப்பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சங்கானையில் கிணற்றில் இருந்து வயோதிப பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை. 11

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வீதி, சங்கானை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து வயோதிப பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் நரம்புத்தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும் "நான் உங்களுக்கு தொந்தரவாக இருப்பதற்கு விரும்பவில்லை" என்றும் உறவினர்களுக்கு கூறியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சங்கானை பகுதியைச் சேர்ந்த கந்தையா அன்னம்மா (வயது 81) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதியாவதற்கு பொன்சேகா விருப்பம்

## சிங்கள இணையத்தளம் பரபரப்பு தகவல்

கொழும்பு, ஜுலை. 11

**பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதிக்கான தேர்தல் வாக்கெடுப்பில் முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தோற்றவுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.**



இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முற்றிலும் அராஜகமாகிவிட்ட நாட்டைக் கைப்பற்றி நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பை ஏற்கத் தயார் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, தனது நண்பர்களிடம் தெரிவித்துள்ளதாக மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த வட்டாரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவுள்ள நிலையில் ஒரு மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதிக்கான தேர்தல் வாக்கெடுப்பில் சரத் பொன்சேகா தோற்றவுள்ளதாக அவரின் நெருங்கிய நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே இருக்கும் போராட்டக்காரர்களின் ஆதரவு தனக்கு கிடைக்கும் என்று பீல்ட் மார்சல் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போராட்டக்களத்தில் சில அரசியல்வாதிகள் கேலிக்குள்ளாக்கப்பட்ட போது, சரத் பொன்சேகாவுக்கு அதிகூடிய பாராட்டுக்கள் கிடைத்தன.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ தப்பிச் செல்லும்போது, உடனடியாக இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஜெனரல் சவேந்திர சில்வா, பீல்ட் மார்சலின் நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

முப்படைகளின் தளபதிகளுடன் சேர்ந்து சவேந்திர சில்வா நாட்டு மக்களுக்கு உரையாற்றி இருந்தார்.

சரத் பொன்சேகா மீதுள்ள மரியாதை காரணமாகவே போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக படையினர் மற்றும் பொலிஸார் போராட்டத்தின் போது சாதகமாக நடந்துள்ளதாக அவரது நண்பர் மேலும் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும்

## மைத்திரிபால கோரிக்கை



கொழும்பு, ஜுலை. 11

ஜனாதிபதியும் பிரதமரும் பொதுமக்களின் ஆணைக்கு பணிந்து உடனடியாக பதவி விலகவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, இந்த அரசாங்கம் பல வருடங்களாக மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

குறைகளை நிவர்த்தி செய்ய பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும் பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கத் தவறியதன் காரணமாக நாடு நாளாந்தம் அராஜகத்தை நோக்கிச் செல்கிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நாட்டின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உடனடியாகச் செயற்படுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆகவே அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலகவேண்டும் என சுதந்திரக் கட்சி சார்பாக கேட்டுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து பிரதமரும் பதவி விலகவேண்டும் என மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (அ)

# கோட்டாபய விலகுவதற்கு முன்னர் அமைச்சரவையை கலைக்கவேண்டும்

கொழும்பு, ஜுலை. 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னர் அமைச்சரவையை கலைக்க வேண்டும் என்று கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சிங்கள வானொலி ஒன்றுக்கு கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்களின் பிரதிநிதிகளில் ஒருவரான கலாநிதி நிலங்க சமரசிங்க கூறியுள்ளதாவது:

அமைச்சரவை கலைக்கப்பட்டதன் பின்னர் புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு கிடைக்கும்.

பதில் ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க வகிக்கவேகூடாது. புதிய அமைச்சரவையில் அமைச்சர் பதவியை வகிப்பதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லை - என்றார். (அ)

# ரணில் வீட்டின் அருகே மின் துண்டிப்பு; காரணத்தை கண்டறிவதற்கு விசாரணை

கொழும்பு, ஜுலை. 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் அமைந்துள்ள பகுதியில் நேற்று முன் தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் மாலை 6 மணிக்குப் பின்னர் கொழும்பில் திட்டமிடப்பட்ட மின்வெட்டு எதுவும்அமுல்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சம்பவம் இடம்பெற்ற போது மின்சாரம் செயலிழந்தமை குறித்து விசாரணை நடத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூறியுள்ளது. (அ)

# எதிர்ப்பால் தேரர் வெளியேறினார்

கொழும்பு, ஜுலை. 11

நேற்று முன் தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக வீட்டைப் பார்வையிடச் சென்ற உலப்பனே ஸ்ரீசுமங்கல தேரருக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் ஆதரவாளர்கள் சிலரால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவர் அங்கிருந்து உடனடியாக வெளியேறினார்.

இதேவேளை, தீயில் எரிந்த பிரதமரின் வீட்டைப் பார்வையிட, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன நேற்றுக் காலை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜுலை 9 வன்முறைச் சம்பவங்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம்

கொழும்பு, ஜுலை. 11

நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சட்டம் மற்றும் அரசியலமைப்பு தொடர்பில் ஊடக நிறுவனங்கள் முன்வைத்திருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலரை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் நேற்று முன் தினம் மாலை 5 ஆம் ஒழுங்கை பகுதியில் சிரச, எம்.ரி.வி ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதல் நடத்தியதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டமை அடங்கலாக அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக சங்கத்தின் தலைவர் ஊடக சந்தப்பில் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எந்த வகையிலும் வன்முறைச் சம்பவங்களை அனுமதிக்க முடியாது எனவும் வன்முறைகள் மூலம் நாட்டில் ஸ்திரமற்ற நிலையே ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலைமைகளால் நாட்டின் பிரஜைகள் மத்தியில் உள்ள ஒற்றுமை சீர்குலையும் என்பதோடு, நாட்டின் பொருளாதார நிலைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு தொடர்பிலான சர்வதேசத்தில் உள்ள நற்பெருக்கு களங்கம் ஏற்படும் என்பதால், இந்த வன்முறைகளுக்கு துணை போக வேண்டாம் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஜனாதிபதி பதவி விலகுவதாக இருந்தால், ஜனாதிபதி தனது கையொப்பத்துடன் கூடிய இராஜினாமா கடிதத்தை சபாநாயகரிடம் கையளிக்க வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன்போது கூறினார்.

அவ்வாறு கையளித்தால் மாத்திரமே ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் பிரகாரம், ஜனாதிபதி பதவி விலகியதும் பிரதமர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். பிரதமரால் அவ்வாறு செயற்பட முடியாவிட்டால், சபாநாயகர் தற்காலிக ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டதும் ஒரு மாதத்திற்குள், தகைமையுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டது.

பாராளுமன்றத்தில் ஒரு மாதத்திற்குள் இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இந்த வாக்கெடுப்பில் வெற்றியீட்டுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் 225 உறுப்பினர்களும் வாக்களிப்பார்களாயின், அவர்களில் 113 பேரின் வாக்குகளை பெறுபவரே ஜனாதிபதியாக தெரிவாக முடியும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறிப்பிட்டார்.

இலங்கையின் வரலாற்றில் ஒரு தடவை மாத்திரமே ஜனாதிபதி பதவி வெற்றிடமானது என்பதை சுட்டிக்காட்டிய அவர், 1993 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ உயிரிழந்ததை அடுத்தே அந்த நிலைமை ஏற்பட்டதாகக் கூறினார்.

ஜனாதிபதி பதவி விலகுவது முதல் புதிய ஜனாதிபதி நியமனம் வரையான செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அனைத்து தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# பார்ட்டிகேட்டும் பதவி விலகலும்

## போரிஸ் ஜான்சன் வீழ்ந்த கதை!



பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்ஸன் தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக கட்சிக்கு இமாலய வெற்றியைப் பெற்றுத் தந்த அவர், மூன்றே ஆண்டுகளில் கட்சியின் நம்பிக்கையை இழந்து விலகியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் 'பிரக்ஸிட்' பிரசாரத்தை முன்னின்று மேற்கொண்டவர்களில் ஒருவரான போரிஸ் ஜான்ஸன், முன்னாள் பிரதமர் தெரசா மே தலைமையிலான ஆட்சியின் போது 2016-18 வரை வெளியுறவு அமைச்சராக இருந்தார். பிரக்ஸிட் விவகாரத்தில் அரசு மென்மையான போக்குடன் நடந்துகொள்வதாக அதிருப்தி தெரிவித்து அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகவும் செய்தார்.

2019-இல் தெரசா மே பிரதமர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, அதே ஆண்டு, ஜூலையில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக போரிஸ் ஜான்ஸன் தேர்வு செய்யப்பட்டார். பிரிட்டனில் ஆளும் கட்சியின் தலைவரே பிரதமராவார் என்ற அடிப்படையில் பிரதமராகவும் பதவியேற்றார்.

பிரக்ஸிட் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய நாடாளுமன்றத்தில் வலுவான பெரும்பான்மையைப் பெற விரும்பிய அவர் முன்கூட்டியே 2019-இல் நாடாளுமன்றத் தேர்தலையும்



சந்தித்தார். முழுவதும் பிரக்ஸிட்டை மையப்படுத்திய அவரது பிரசாரத்துக்கு பிரிட்டன் மக்கள் பேராதரவு அளித்தனர்.

அதன்படி, அத்தேர்தலில் போரிஸ் ஜான்ஸன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி மொத்தம் உள்ள 650 இடங்களில் 356-ஐ (56 சதவீதம்) கைப்பற்றி சாதனை படைத்தது. 1983-இல் மார்க்கரெட் தாட்சர் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சி 397 இடங்களில் வென்றிருந்தது. அதன் பின்னர் கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்களில் அதிக இடங்களைக் கைப்பற்றியவர் என்கிற பெருமை போரிஸ் ஜான்ஸனுக்கே உரியது. அவர், தேர்தல் பிரசாரத்தில் உறுதியளித்தபடி, பிரக்ஸிட் ஒப்பந்தம் 2020, ஜனவரியில் சட்டமானது.

2020, கொரோனா பெருந்தொற்று காலத்தில் போரிஸ் ஜான்ஸனுக்கு சரிவு தொடங்கியது. கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை மீறி டௌனிங் வீதியில் உள்ள பிரதமரின் அதிகாரபூர்வ இல்லத்தில் அதே ஆண்டு ஜூன் மாதம் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் பங்கேற்க அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், அரசு அதிகாரிகள் நடத்திய விருந்திலும் அவர் பங்கேற்க புகார்கள் எழுந்தன.

'பார்ட்டிகேட் ஊழல்' என்ற இந்த விவகாரம் தொடர்பாக விசாரணையும் நடத்தப்பட்டு, போரிஸ் ஜான்ஸன் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டதால், கடந்த ஏப்ரல் மாதம் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. அரசின் விதிமுறைகளை மீறிய முதல் பிரதமர் என அவரை எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. ஆளும் கட்சியிலும் அவருக்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. இதையடுத்து, நாடாளுமன்றத்தில் அவர் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அந்த எதிர்ப்பின் தொடர்ச்சியாக, ஆளும் கட்சி சார்பிலேயே அவருக்கு எதிராக கடந்த ஜூன் 6-ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதில் அவருக்கு ஆதரவாக 211 வாக்குகள் கிடைத்தாலும், எதிராக 148 பேர் வாக்களித்தனர். குறைவான வித்தியாசத்தில்தான் அவரது பிரதமர் பதவி தப்பியது என்ற நிலையில், அதன்பிறகு போரிஸ் ஜான்ஸன் சுதாரித்துக் கொள்ளாததுதான் சோகம்.

பாலியல் புகார் உள்ளிட்ட பல புகார்களில் தொடர்புடைய தனது கட்சி எம்.பி. கிறிஸ் பின்ஞ்சர் என்பவரை கட்சியின் துணை தலைமைக் கொறடாவாக நியமித்தார் போரிஸ் ஜான்ஸன். அதற்கு கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு கிளம்ப, கிறிஸ் 'பின்ஞ்சர் மீதான புகார்கள் குறித்து போரிஸ் ஜான்ஸன் அறிந்திருக்கவில்லை' என பிரதமர் அலுவலகம் விளக்கம் அளித்திருந்தது. கடந்த ஜூன் 29-ஆம் திகதி அதே போன்ற ஒரு புகாரில் சிக்கிய கிறிஸ் பின்ஞ்சர், தனது கட்சிப் பதவியை ராஜினாமா செய்தார். இந்த முறை, 2019-ஆம் ஆண்டே கிறிஸ் பின்ஞ்சர் மீதான புகார்கள் குறித்து தெரிந்தும் அவரை துணை தலைமைக் கொறடாவாக நியமித்தது தனது தவறுதான் என போரிஸ் ஜான்ஸன் மன்னிப்பு கோரினார்.

> ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக கட்சிக்கு இமாலய வெற்றியைப் பெற்றுத் தந்த அவர், மூன்றே ஆண்டுகளில் கட்சியின் நம்பிக்கையை இழந்து விலகியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன.

இந்த விவகாரத்தில் போரிஸ் ஜான்ஸனின் முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடு, கட்சியில் கொந்தளிப்பை ஏற்படுத்த, சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் ஜாவித், நிதியமைச்சரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் என அடுத்தடுத்து 50-க்கு மேற்பட்ட அமைச்சர்கள், எம்.பி.க்கள் ராஜினாமா அறிவிப்பை வெளியிட, இறுதியில் கட்சியின் நம்பிக்கையை இழந்த நிலையில் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார் போரிஸ் ஜான்ஸன்.

மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்தபோதிலும், பிரதமரின் பொறுப்புக்குரிய செயல்பாடுகளில் கவனக்குறைவாக இருந்ததால், இன்று பதவி விலக வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியதால் அதற்கு லாபமா, நஷ்டமா என்ற கணக்கீடுகள், விமர்சனங்கள் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. இருப்பினும், பிரக்ஸிட் ஒப்பந்தத்தை சொன்னபடி நிறைவு செய்தது, உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைக்க முயற்சி மேற்கொண்டது என போரிஸ் ஜான்ஸனின் சாதனைகளைப் புறந்தள்ள முடியாது.

இந்தியாவுடனான உறவையும் போரிஸ் ஜான்ஸன் விரும்பி வந்தார். இரு நாடுகளுக்கிடையேயான உறவு அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி, போரிஸ் ஜான்ஸன் இடையே கடந்த ஆண்டு மே மாதம் மேற்கொண்ட ஒப்பந்தம் முக்கியக் காரணம் என்ற அளவில், அவரது பதவி விலகல் இந்தியாவுக்கு இழப்புதான்.

ஆனால், அடுத்த பிரதமர் பதவிக்கான போட்டியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அட்டானி ஜெனரல் சூவெல்லா பிரேவர்மன், ரிஷி சுனக் ஆகியோர் இருப்பது, அந்த நாட்டின் அரசியல் நகர்வுகளை இந்தியா ஆர்வத்துடன் கவனிப்பதற்குக் காரணமாகியுள்ளது.



# இலங்கை பொருளாதார நெருக்கடி: "மற்ற ஆசிய நாடுகளுக்கான பாடம்"

## மகாதீர் மொஹம்மத் எச்சரிக்கை!



இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது மற்ற ஆசிய நாடுகளுக்கான எச்சரிக்கை மணி என மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் மொஹம்மத் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகள் பொறுப்பான நிதிக் கொள்கைகளைக் கையாள வேண்டும் என்றும், அவ்வாறு செயல்படவில்லை எனில் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஆகு) பிடியில் சிக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் அந்நாட்டின் கடன் சுமையும் ஆசிய நாடுகளுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், மகாதீர் மொஹம்மத் இது தொடர்பாக ஆசிய நாடுகளுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

25 ஆண்டுகளுக்கு முன்பு மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டன. அப்போது மலேசிய ரிங்கிட்டின் மதிப்பு திடீரெனச் சரிந்தது. நாடு பொருளாதார ரீதியில் ஆட்டம் கண்ட நிலையில், சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார் மகாதீர். அவை பல்வேறு விவாதங்களையும் விமர்சனங்களையும் எழுப்பின.

எனினும் நீண்டகால அடிப்படையில் பார்க்கும்போது தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளும் எடுத்த முடிவுகளும் நல்ல பலன்களை அளித்ததாக அவர் கூறுகிறார்.

### "IMF பிடியில் சிக்கிவிட வேண்டாம்"



அந்நியச் செலாவணி அறவே இல்லாத நிலையில், தவிப்புக்கு ஆளாகி உள்ள இலங்கை, தனது வெளிநாட்டு கடன்களுக்கான தவணையைச் செலுத்த முடியாமல் உள்ளது. இதையடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் கடனை எதிர்பார்த்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இத்தகைய சூழலில், அந்த நிதியத்தின் பிடியில் சிக்கிவிட வேண்டாம் என ஆசிய நாடுகளை எச்சரித்துள்ளார் மகாதீர்.

"கடன் கொடுத்தவர்களுக்கு திருப்பிச் செலுத்தும் அளவுக்கு போதுமான நிதி இருப்பைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இலங்கைக்குள்ள பெரிய பிரச்னை. மிக மோசமான முதலீட்டுக் கொள்கையும், மோசமான நாணய, நிதி மேலாண்மையும்தான் இதற்குக் காரணம்.

"இலங்கை சென்ற பாதையில் நாமும் செல்வதற்கான வாய்ப்புள்ளது என்று அனைவரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளனர். இது அனைவருக்குமான பாடம்" என்கிறார் மகாதீர்.

ஆசியாவில் பொருளாதார சிறந்த நிலையில் உள்ளதாக கருதப்படும் சீனாவிடம் நிதி நெருக்கடிகளைத் தடுக்க போதுமான ஆதாரங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், ஆசிய வட்டாரத்தில் உள்ள வளரும் பொருளாதாரத்தை கொண்ட நாடுகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் மூலதனக் கட்டுப்பாடுகளை விதிக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

25 ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய வழிமுறைகளை தாம் கையாண்டதாகவும், அதன் மூலமாகத்தான் அப்போது எதிர்கொண்ட நெருக்கடியில் இருந்து, தமது தலைமையில் மலேசியா மீண்டு வந்தது என்றும் அண்மைய பேட்டி ஒன்றில் மகாதீர் குறிப்பிட்டுள்ளார்.

"நாணய வர்த்தகர்கள் உண்மையில் சீனாவுக்கு ஆட்டம் காட்ட முடியாது. எனவே, நாணயச் சந்தையில் பங்கேற்க விரும்பும் பிற வளரும் நாடுகள் கவனமுடன் இருக்க வேண்டும்," என்கிறார் மகாதீர்.

கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்க டாலரின் மதிப்பு தற்போது மிக வலுவாக உள்ளது. இதே வேளையில், ஆசிய நாடுகளின் நாணய மதிப்பு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. இதன் எதிரொலியாக, பணவீக்கம் அதிகரித்துள்ளதுடன், அமெரிக்க டாலரில் செலுத்தப்பட வேண்டிய கடன் சுமையும் உயர்ந்துள்ளது.

ஒரு நாட்டின் நாணய மதிப்பானது, ஐந்து விழுக்காடு அளவுக்கு அதிகரிக்கவோ, குறையவோ செய்தால் பிரச்னை இல்லை என்று குறிப்பிட்டுள்ள மகாதீர், ஐம்பது விழுக்காடு அளவுக்கு மதிப்பு குறையும்போது, மக்கள் ஏழைகளாகிவிடுவர் என்றும், இதுபோன்ற நிலை ஏற்பட அனுமதிக்கக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

### சர்வதேச நாணய நிதியத்தைப் புறக்கணித்த மலேசியா

கடந்த 1997ஆம் ஆண்டு ஆசிய வட்டாரத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட தலைவர்களில் மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீரும் ஒருவர். அதே போன்ற நெருக்கடி மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிடிகளில் சிக்கிவிட வேண்டாம் என்று ஆசிய நாடுகளுக்கு அவர் விடுத்துள்ள எச்சரிக்கையின் பின்னணியில் அவர் எதிர்கொண்ட சில அனுபவங்கள் உள்ளன.

1997 நெருக்கடியின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களை முற்றிலுமாகப் புறக்கணித்தார் மகாதீர்.

இச்சமயம் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்து தனது நாணயமான "பாட்"டின் (Baht) மதிப்பை பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் பலன் அளிக்கவில்லை. அந்நாட்டில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகள் பெருமளவில் திரும்பப் பெறப்பட்டதால் சிக்கலை எதிர்கொண்டது தாய்லாந்து.

அந்நாட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடி தென் கிழக்கு ஆசிய வட்டாரத்தில் உள்ள மற்ற நாடுகளையும் பாதித்தது. சரியாக இரண்டே வாரங்களில் மலேசியாவின் ரிங்கிட்டின் மதிப்பு வெகுவாக சரிவு கண்டது.

மலேசிய பங்குச் சந்தையின் குறியீடு 75 விழுக்காடு அளவுக்கு குறைந்தது. அந்நிய முதலீடுகள் நாட்டை விட்டு வேகமாக வெளியேறின. அந்நாட்டின் நாணயமான ரிங்கிட்டின் மதிப்பு சரிபாதியாக குறைந்ததால் தொழில் முனைவோர் கடன்களை திருப்பிச் செலுத்த திணறினர்.

தொடக்கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டது மலேசியா. அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்து வட்டி விகிதங்களை உயர்த்தியது. இதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என நம்பியது.

ஆனால், அந்த நம்பிக்கை நீண்ட காலம் நீடிக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் பல பரிந்துரைகளைப் புறக்கணித்தார் அன்றைய மலேசிய பிரதமர் மகாதீர். அந்த பரிந்துரைகளுக்கு நேர்மாறாக மலேசிய அரசாங்கம் அதிகம் செலவிட்டது. இதன் மூலம் பொருளாதாரம் மேம்படும் என்றார் மகாதீர். மேலும் பல்வேறு மூலதனக் கட்டுப்பாடுகளையும் விதித்தார்.

டாலருக்கு எதிரான ரிங்கிட்டின் மதிப்பை மலேசியாவே நிர்ணயித்தது. இந்த நிலை 2005ஆம் ஆண்டு வரை நீடித்தது.


"சர்வதேச நாணய நிதி யம், உலக வங்கியை அணுகும்போது அவை இரண்டும் ஒரு நாடு வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்துகிறதா என்பதை மட்டுமே கவனம் செலுத்தும். மற்ற படி, உங்கள் நாட்டுக்கு அரசியல், பொருளாதார ரீதியாக என்ன நேர்ந்தாலும் அவை கண்டுகொள்ளாது.




நாட்டை வழிநடத்தும் பொறுப்பை தங்கள் கையில் எடுத்துக்கொள்ள விரும்புவார்கள். மேலும், நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும் தாங்களே வகுக்க நினைப்பார்கள். அப்படியெனில், நாம் அவர்களிடம் சரணடைய வேண்டும் என்று அர்த்தம்," என்கிறார் மகாதீர் மொஹம்மத். (பிபிசி)


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)

39. 

3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..................................................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..................................................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..................................................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..................................................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..................................................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..................................................

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..................................................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1 — 11.07.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2 — 11.07.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இனவாத சுவர்களை உடைத்துக்கொண்டு முன்னேறிய தன்னெழுச்சி மக்களின் ஒற்றுமைக்கு கிடைத்த பரிசு!

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைரூஸ்

அம்பாறை, ஜுலை. 11

கஷ்டங்கள் நீங்கி தினம் நல்லன நடக்கும் நாடொன்றை நோக்கி மக்கள் அலைகடலாக அணிதிரண்டிருப்பது இலங்கை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல உலக அரசியலுக்கே ஒரு செய்தியை கூறியிருக்கும் சம்பவமே. மக்கள் தன் எழுச்சி வெற்றியை நோக்கி நகர்வது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த சம்பவத்தின் மூலம் பொறுமை காத்து அடங்கியிருக்கும் மக்கள் பொறுமையிழந்து வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மக்களை பலியிட நினைக்கும் எல்லோருக்கும் அறிய வைத்துள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைறூஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்-

மக்கள் சுதந்திரமாக சுவாசிப்பதற்கும் கூட இன்று வரிசையில் நிற்கவேண்டிய அவலநிலை இலங்கையில் இருக்கிறது. ஊழல், அதிகார துஸ்பிரயோகங்கள் காரணமாக சீரழிக்கப்பட்ட வளமிக்க இலங்கை தாய்நாட்டை மீட்க அரசியல்வாதிகளினால் கட்டமைக்கப்பட்ட இனவாத, பிரதேசவாத தடை சுவர்களை உடைத்துக்கொண்டு இனவாத அரசுக்கு எதிராக கொழும்பு உட்பட முக்கிய இடங்களை முடக்கியிருப்பது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய வரலாற்று திருப்பமாக உள்ளது.

இப்பணியை சிறப்பாக முன்னெடுக்க இரவுபகலாக அரசின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், கஷ்டங்களுக்கு மத்தியிலும் இரண்டு மாதங்களுக்கு மேலாக வீதியில் அமர்ந்திருந்து போராடிய நாளைய தலைவர்களான இளைஞர்கள், தாய்நாட்டை நேசித்த இலங்கையர்கள், மதபோதகர்கள், சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அவர்களுக்கு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அரசியல் பிரமுகர்கள் எல்லோருக்கும் தாய்நாட்டை நேசிக்கும் இலங்கையனாக நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

மக்களின் தன்னெழுச்சி வெற்றியானது ஒற்றுமைக்கு கிடைத்த பரிசாக நோக்குகிறேன்-என்றார். (அ)

# சட்டவிரோத மதுபான விற்பனை; புன்னைச்சோலையில் பெண் கைது



மட்டக்களப்பு, ஜுலை. 11

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள குமாரபுரம் புன்னைச்சோலை பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையத்தை நேற்று முன் தினம் முற்றுகையிட்ட பொலிஸார், அதை நடத்தி வந்த 45 வயதுடைய பெண் ஒருவரை கைது செய்யதுள்ளனர்.

இதன்போது, கால் போத்தல் கொண்ட மதுபானப் போத்தல்கள் 126 கைப்பற்றப்பட்டதாக, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார். (அ)

# கிழக்கில் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஜுலை. 11

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வழியுறுத்தி கொழும்பில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில், திருகோணமலை - சேருநுவர பகுதியில், மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில், காத்தான்குடியில் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

# மாளிகைக்காடு, சாய்ந்தமருதில் அதிகாலையில் ஹஜ் தொழுகை



அம்பாறை, ஜுலை. 11

புனித ஹஜ்ஜுப் பெருநாளை நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் இம்முறை இலங்கை முஸ்லிங்கள் சுகாதார வழிமுறைகளை பேணி அமைதியான முறையில் நாடுதழுவிய ரீதியில் நேற்று கொண்டாடினர்.

மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் ஜும்மா பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது அல்- அக்ஸா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அப்துல் ஜப்பார் நிகழ்த்தினார்.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெருநாள் தொழுகையும், குத்பா பிரசங்கமும் சாய்ந்தமருது அப்பிள் தோட்ட திடலில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் மௌலவி எம்..எஸ்.எம். ஸாதிக் நிகழ்த்தினார்.

பொருளாதார தடைகள், கஷ்டங்கள், நெருக்கடிகள் நீங்கி நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் ஓங்க துஆ பிராத்தனை இடம்பெற்றதுடன் முஸ்லிங்கள் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் தொழுகையில் ஈடுபட்டிருந்ததுடன், தொழுகை முடிந்தவுடன் தமது அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறி கொண்டனர். மரணித்த உறவுகளுக்காக அவர்களின் குடும்ப உறுப்பினர்களினால் மையவாடிகளில் துஆ பிராத்தனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மருதமுனையில் ஹஜ் தொழுகை



அம்பாறை, ஜுலை. 11

புனித ஹஜ் பெருநாள் தொழுகை 3 வருடங்களுக்கு பின்னர் அம்பாறை மாவட்டம் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெற்றது. இதன் போது கலாநிதி அஷ்செய்க் எம்.எல்.முபாறக் மதனி தொழுகை நடாத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார். இதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

இதே வேளை அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை ,கல்முனை, சம்மாந்துறை ,நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில், உள்ளிட்ட முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன.

3 வருடங்களுக்கு பின்னர் மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் உட்பட இதர காரணங்களினால் பெருநாள் தொழுகை கட்டுப்பாடுகளுடன் நாடுபூராகவும் இடம்பெற்றிருந்தன.இன்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித ஹஜ் பெருநாள் பண்டிகையை 3 வருடங்களின் பின்னர் சிறப்பாக அனுஷ்டித்தனர் .

பெருநாள் தொழுகையினை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொண்டனர். (அ)

# ஓட்டமாவடி மண்ணு ஸல்வா வளாகத்தில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிகழ்வுகள்



மட்டக்களப்பு, ஜுலை. 11

புனித ஹஜ்ஜுப் பெருநாள் திறந்த வெளியிலான தொழுகை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மண்ணு ஸல்வா வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பெருநாள் தொழுகையையும் பெருநாள் கொத்பா பேருரையையும் அல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஹாறூன் ஸஹ்வி நடாத்தியதுடன், திறந்த வெளியிலான தொழுகையில் அதிகமான ஆண்களும் பெண்களும் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித ஹஜ்ஜுப் பெருநாள் பண்டிகையை அனுஷ்டித்தனர். பெருநாள் தொழுகையினை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொண்டனர். (அ)

# அடுத்த பிரிட்டன் பிரதமர் யார்?

## போட்டியிடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

லண்டன், ஜூலை. 11

**பொரிஸ் ஜோன்ஸன் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, நாட்டின் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் பங்கேற்கவிருப்பதாக அதிகாரபூர்மாக அறிவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.**



முதலாவதாக, அந்தப் போட்டியில் பங்கேற்கவிருப்பதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர். சூயலா பிரேவ்மேன் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

அவருக்கு அடுத்தபடியாக, கொரோனா தடுப்புக் குழு துணைத் தலைவர் ஸ்டீவ் பேக் கரும் அதனைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறை அமைச் சர் கிரான்ட் ஷாப்ஸும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்தனர்.

இந்த நிலையில், வெளிவிவகா ரங்களுக்கான சிறப்புக் குழு தலை வராக பொறுப்பு வகித்து வரும் டாம் டுகென்தாட்டும் பிரதமர். பதவிக்கான போட்டியில் பங்கேற்கப்போவதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

இது தவிர, நிதியமைச்சர் பதவியிலிருந்து அண்மையில் விலகிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கும் இந்தப் போட்டியில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதவிர, சஜித் ஜாவித் மற்றும் ஜெர்மி ஹண்ட் ஆகியோர் ஏற்கனவே நடைபெற்ற தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர்கள். அவர்கள் இந்த முறையும் போட்டியிட வாய்ப்புண்டு.

அதேபோல, வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டண்ட், வெளியுறவு செயலர் லிஸ் ட்ரஸ், வெளியுறவு விவரங்கள் குழு தலைவர் டாம் டுகெந்தாட், பாதுகாப்பு செயலர் பென் வாலேஸ், கருவூலர் நாதிம் ஸகாவி', அட்டர்னி ஜென ரல் ஸ்வெல்லா ப்ரேவர் மேன் ஆகியோரும் இந்த பட்டியலில் உள்ளனர்.

அவரைத் தவிர, மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் பங்கேற்க முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான வாக்கெடுப்பு திகதி களை கன்சர்வேட்டிவ் கட்சியின் சக்தி வாய்ந்த '1922 குழு' அடுத்த வாரம் அறி விக்கும். எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ரகசிய வாக்கெடுப்புகளில், கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடைபெறும், அதில் இறுதியாக வெற்றி பெறுபவர், பிரித்தானியாவின் அடுத்த பிரதமரா கப் பொறுப்பேற்பார். (அ)



## அவுஸ்திரேலிய நடன விழாவில் 4,084 பேர் ஒரே நேரத்தில் நடனமாடி உலக சாதனை!

கான்பரா, ஜூலை. 11

அவுஸ்திரேலியாவின் அதிகாரப்பூர்வமற்ற தேச நடனம் என கூறப்படும் நட்புஷ் நடன விழாவில் ஒரே நேரத்தில் 4,000 பேர் கலந்து கொண்டு உலக சாதனை படைக்கப்பட்டது.

ரெட் பாஷ் இசைத் திருவிழாவில் அமெரிக்க பாடகி டினா டர்னரின், சுதந்திர பாடலுக்கு முல் லட், குட்டை பாவாடையான டூடஸ், டைனோசர், உள்ளிட்ட வேடமிட்டு மக்கள் நட்புஷ் நடன மாடினர். ஏறத்தாழ 4,084 பேர் ஒரே இடத்தில் கூடி நடன மாடி உலக சாதனை படைக்கப்பட்டது. (அ)

## பாகிஸ்தானில் கனமழை; திடீரென வெள்ளப்பெருக்கு

### 59 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத் ஜூலை. 11

பாகிஸ்தான் நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக, அந்நாட்டின் பலூசிஸ்தான், கைபர் பக்துவா ஆகிய மாகாணங்களில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.




கனமழை காரணமாக 8 அணைகள் உடைந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல நகரங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. வெள்ளப் பெருக்கு காரணமாக பல வீதிகளில் நீர் நிரம்பியுள் ளதோடு, நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 59 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக்குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

## ஷின்சோ அபே ஏன் சுடப்பட்டார்?

ரோக்கியோ, ஜூலை. 11

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயை சுட்டுக் கொன்றமைக்கான காரணத்தை பொலிஸ் விசாரணையில் கொலையாளி வெளியிட்டுள்ளார்.

பொலிஸாரால் பெயர் வெளியிடப்படாத ஒரு அமைப்பின் பெயரைக் குறிப்பிட்டு அந்த அமைப்பின் மீது வெறுப்பு கொண்டிருந்ததாக கொலையாளி தெரிவித்துள்ளார்.

அந்தக் குழுவின் ஒரு பகுதியாக அபே இருப்பதாக நம்பியதாக 41 வயதான டெட்சுயா யமகாமி என பெயரிடப்பட்ட துப்பாக்கிதாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல்11.30 மணியளவில் மேற்கு ஜப்பானில் நரா நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது பின்னால் இருந்து ஷின்சோ அபே மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த அபே மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் வீட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் அபேயை சுட்டதை துப்பாக்கிதாரியான யமகாமி ஒப்புக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அபே ஜப்பானின் நீண்ட காலம் பிரதமராக இருந்தவர். 67 வயதில் அவரது மரணம் துப்பாக்கிக் குற்றங்கள் மிகவும் அரிதான ஜப்பானை ஆழமாக அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (அ)

## கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து நொறுங்கியது ஹெலி!

கான்பரா, ஜூலை. 11

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மோசமான வானிலை உள்ளிட்ட காரணங் களால் திசை மாறிய ஹெலிகொப்டர், குடியிருப்பு பகுதிகளுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

குடியிருப்பு பகுதிக்கு மேலே வானில் பறந்து கொண்டிருந்த ஹெலி கொப்டர் திடீரென கட்டுப்பாட்டை இழந்து வட்ட மடித்தது, தரையில் விழுந்து தீபற்றியதாக கூறப்படுகிறது.

ஹெலிகொப்டரில் இருந்து வெளியேறிய கரும் புகை மூலம் அடையாளம் கண்டு வீரர்கள் மீட்பு பணி மேற்கொண்டனர்.

## ருவிட்டர் தளத்தை 44 பில்லியன் டொலர்கள் கொடுத்து வாங்கும் ஒப்பந்தத்தை இரத்து செய்தார் எலான் மஸ்க்!

முன்னணி சமூகவலைதளமான ருவிட்டர் தளத்தை 44 பில்லியன் டொலர்கள் கொடுத்து வாங்கும் ஒப்பந்தத்தை இரத்து செய்வதாக, டெஸ்லா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும், உலகின் பணக் காரருமான எலான் மஸ்க் தெரிவித் துள்ளார்.

ருவிட்டர் தளத்தில் போலி அல்லது ஸ்பேம் கணக்குகள் பற்றிய தகவல்களை நிறுவனம் வழங்கவில்லை என்று எலான் மஸ்க் கூறியுள்ளார்.

பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தில் தாக்கல் செய்ததில், மஸ்கின் வழக்கறிஞர்கள், போலி கணக்குகள் குறித்து சரியான தகவலை ருடுவிட்டர் நிறுவனம் தரவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், தனது பல்வேறு கேள்விகள், சந்தேகங்களுக்கும் ருவிட்டர் நிர்வாகம் சரியான விளக்கம் அளிக்கவில்லை என்று மஸ்க் புகார் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவு செய்ய எலான் மஸ்க் மீது வழக்கு தொடரப்போவதாக ருவிட்டர் நிறுவனமும் அறிவித்துள்ளது.

எலான் மஸ்கிற்கு ருவிட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலர்கள் தொகைக்கு விற்பனை செய்ய ருவிட்டர் நிர்வாக குழு ஒப்புதல் அளித்தது. ஆனால் ருவிட்டரில் 20-50 சதவீதம் போலி கணக்குகள் இருப்பதாகவும், அதன் கணக்குகளை முடக்க உள்ளதாகவும் எலான் மஸ்க் தெரிவித்திருந்தார்.

ஆனால், 5 சதவீதத்திற்கும் குறைவான போலி கணக்குகளே உள்ளதாக ருவிட்டர் நிறுவனம் தெரிவித்து வந்தது. இந்நிலையில், ருவிட்டர் சமூக வலைதள நிறுவனத்தை வாங்குவ தற்காக போடப்பட்ட ஒப்பந்தத்தை எலான் மஸ்க் இரத்து செய்துள்ளார். (அ)



# ஜோகோவிச் இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்!

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்று நோவக் ஜோகோவிச் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரித்தானியாவின் கேமரூன் நோரியை எதிர்கொண்டார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், நோவக் ஜோகோவிச், 2-6, 6-3, 6-2, 6-4 என்ற செட் கணக்குகளில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (அ)

# இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டி: இந்திய அணி 49 ஓட்டங்களால் வெற்றி




இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 49 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய, இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து இந்திய அணி 170 ஓட்டங்களை குவித்தது. அவ்வணி சார்பாக ரவீந்திர ஜடேஜா அட்டமிழக்காமல் 46 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இதனை அடுத்து 171 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 17 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியை தழுவியது.

இதனால் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருப்பது தொடரை ஒரு போட்டி மீதமிருக்க இந்திய அணி 2-0 என்ற அடிப் படையில் கைப்பற்றியுள்ளது. (அ)

# முதல் தடவையாக விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார் எலினா ரிபக்கினா



அகில இங்கிலாந்து லோன் ரென்னிஸ் கழக மத்திய அரங்கில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஒன்ஸ் ஜெபோருடனான சீமாட்டிகள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் 2 - 1 என்ற செட்கள் அடிப்படையில் வெற்றி பெற்ற எலினா ரிபக்கினா முதல் தடவையாக விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

இதன் மூலம் கிராண்ட் ஸ்லாம் போட்டி ஒன்றில் சம்பியனான முதலாவது கஜகஸ்தானியர் என்ற வரலாற்றுச் சாதனையை ரிபக்கினா படைத்தார்.

ரஷ்யாவில் பிறந்த ரிபக்கினா, 2018இல் கஜகஸ்தான் பிரஜையாகி அந்நாட்டுக்காக விளையாடி வருகிறார்.

நிரல்படுத்தலில் 17ஆம் இடத்திலிருந்த 23 வயதான ரிபக்கினா, விம்பிள்டனில் தனது 7 வெற்றிகளில் 2 செட்களில் மாத்திரமே தோல்வி அடைந்தார்.

தரவரிசையில் 2ஆம் இடத்திலுள்ள துனிசிய வீராங்கனை ஒன்ஸ் ஜெபோருடனான இறுதிப் போட்டியின் முதலாவது செட்டில் 3 - 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் எலினா ரிபக்கினா தோல்வி அடைந்தார்.

முதலாவது செட்டில் ஜெபோர் வெற்றிபெற்றதால் அவர் சம்பியனாவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அடுத்த 2 செட்களில் மிகத் திறமையாக விளையாடிய ரிபக்கினா முறையே 6 - 2, 6 - 2 என வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

இந்த வெற்றியின் மூலம் தனது முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை ரிபக்கினா வென்றெடுத்தார்.

விம்பிள்டனில் சம்பியனானது எனக்கு பெரு மகிழ்ச்சியையும் பெருமையையும் கொடுத்துள்ளது என ரிபக்கினா குறிப்பிடார்.

இந்த வெற்றி குறித்து பேசிய ரிபக்கினா,, "எனக்கு வார்த்தைகள் வரமாட்டேன் என்கிறது. இரசிகர்கள் கூட்டம் நம்பமுடியாததாக இருந்தது. ஒன்ஸை வாழ்த்த விரும்புகிறேன். ஒன்ஸ் நீங்கள் ஒரு உத்வேகம் கொண்ட வீராங்கனை. உங்களை எதிர்த்த விளையாடியது மகிழ்ச்சியாக இருக்கிறது. நம்பமுடியாத சூழ்நிலையில் இங்கு விளையாடக் கிடைத்தது பெருமை தருகிறது.

"இரண்டாவது வாரத்தில் நுழைவேன் என நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு சம்பியனாக இருப்பது ஆச்சரியம் தருகிறது. எனது அணியினர் இல்லாமல் நான் இந்த இடத்தில் இருந்திருக்க மாட்டேன். எனவே அவர்களுக்கு எனது மிகப் பெரிய நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். எனது பெற்றோருக்கும் முக்கியமாக நன்றி கூறுகிறேன்" என்றார். (அ)




# சென்னை சுப்பர் கிங்ஸ் தொடர்பான இன்ஸ்டாகிராம் பதிவுகளை நீக்கிய ஜடேஜா

ஒவ்வொரு வருடமும் டோனியின் பிறந்தநாளுக்கு ஜடேஜா மறக்காமல் வாழ்த்து தெரிவிப்பார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடனான நெருக்கம் குறைந்து வருவதால் 2023ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஜடேஜா விளையாடுவது சந்தேகம் தான் எனத் தெரியவந்துள்ளது. ஐபிஎல் கிரிக்கெட்டில் டோனி தலைமையிலான சென்னை அணி 4 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. 5ஆவது சீசனில் நடப்பு சாம்பியனாக களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர் தோல்விகளை சந்தித்து புள்ளிப் பட்டியலில் தொடர்ந்து 9ஆவது இடத்தில் நீடித்து வந்தது. 15ஆவது சீசன் துவங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு சென்னை சுப்பர் கிங்ஸ் கப்டன் பதவியை ஏற்றுக்கொண்ட ஜடேஜா முதல் 8 போட்டிகளில் 2 வெற்றிகளை மட்டுமே பெற்றுக்கொடுத்தார். அதுமட்டுமல்ல துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்திலுமே படுமோசமாக சொதப்பினார்.

இந்நிலையில் கப்டன் பதவியில் இருந்து விலகியவுடன் அவர் தொடரில் இருந்தே வெளியேறியது ரசிகர்களுக்கு குழப்பத்தை உண்டாக்கியது. கப்டன் பொறுப்பை மாற்றியதில் அவருக்கும் அணி நிர்வாகத்திற்கும் மனக்கசப்பு ஏற்பட்டு அவர் வெளியேறியதாக தகவல் வெளியானது.

இந்நிலையில் அதனை உறுதி செய்யும்படியான விஷயங்களை ஜடேஜா செய்துள்ளார். அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கடந்த 2021 மற்றும் 2022ஆம் ஆண்டு ஐபிஎல் பதிவுகளை திடீரென முற்றிலுமாக நீக்கியுள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் குறித்த அனைத்து புகைப்படங்களையும் நீக்கிவிட்டார். இது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது ஒருபுறம் இருக்க டோனிக்கும் - ரவீந்திர ஜடேஜாவுக்கும் இடையேயான உறவிலும் விரிசல் ஏற்பட்டிருக்கலாம். ஒவ்வொரு வருடமும் டோனியின் பிறந்தநாளுக்கு ஜடேஜா மறக்காமல் வாழ்த்து தெரிவிப்பார். ஆனால் இந்த ஆண்டு மற்ற அனைத்து வீரர்களும் வாழ்த்து தெரிவித்த போதும், ஜடேஜா எதுவும் கண்டுக்கொள்ளவில்லை. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடனான நெருக்கம் குறைந்து வருவதால் 2023ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஜடேஜா விளையாடுவது சந்தேகம் தான் எனத் தெரியவந்துள்ளது. (அ)



# ஸ்விங் பந்து வீச்சு மூலம் தாக்குதல் நடத்தினேன்!

இரண்டாவது ரி20 போட்டியில் இங்கிலாந்து 121 ரன்களுக்கு சுருண்டது. புவனேஷ்வர் குமார், பும்ராவின் சிறப்பான வேகப்பந்து வீச்சால் இந்தியா வெற்றி.

பர்மிங்காம்: இங்கிலாந்திற்கு எதிரான 2ஆவது ரி20 போட்டியில் இந்திய அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்தியா சார்பில் சிறப்பாக பந்து வீசிய புவனேஷ்வர் குமார் 3 விக்கெட்டையும், பும்ரா, சஹால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டி நிறைவுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புவனேஷ்வர்குமார், ஸ்விங் முறை பந்து வீச்சு மூலம் இங்கிலாந்து துடுப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறினார். ரி20 கிரிக்கெட்டில் பந்து நீண்ட நேரம் ஸ்விங் ஆனது தமக்கு ஆச்சரியமாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த தொடரை இந்திய அணி 2-0 என கைப்பற்றியதில் ஆச்சரியமில்லை என்றும், அவர் தெரிவித்தார். இங்கிலாந்திற்கு எதிராக அவர்களது சொந்த நாட்டில் 3-0 என்ற கணக்கில் தொடரை இந்தியா முழுமையாக கைப்பற்றினால் நன்றாக இருக்கும் என்று அவர் ஒப்புக்கொண்டார் தாம் நேர்மறையாகவே சிந்திப்பதாகவும், டெஸ்ட் போட்டிகளில் தமக்கு எந்த வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை சிறப்பாக செய்ய முயற்சிப்பேன் என்றும் புவனேஷ்வர் குமார் குறிப்பிட்டார். (அ)







லண்டன் ஆர்ச்வேயில் உள்ள உயர் வாசற்குன்று முருகன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்றனர். (அ)

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் பாரபட்சமற்ற விசாரணை வேண்டும்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 11

ஊடகவியலாளர்களை இலக்காகக் கொண்டு அவர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நடத்திய கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில்-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு முன்பாக அரச வன்முறையைப் பயன்படுத்தி சிரச ஊடகவியலாளர்கள் நால்வரை இலக்காக் கொண்டு அவர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நடத்திய கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அது மட்டுமன்றி, தாக்கப்பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கூட விரட்டி விரட்டி தாக்கும் அளவுக்கு பாதுகாப்புப் படையினர் மனிதாபிமானமற்றவர்களாக மாறிவிட்டனர்.

மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை உறுதி செய்வதற்காக நாகரீகமான ஊடகப் பயன்பாட்டில் ஈடுபட்ட மற்றும் அது தொடர்பாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஊடகவியலாளர்கள் குழுவொன்று குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டமை அதிகாரம் வாய்ந்த ஜனாதிபதியை நான்கு சுவர்களுக்குள் முடக்கி வீட்டுக்கு அனுப்பிய மக்கள் போராட்டத்திலிருந்து பிரதமர் இன்னும் பாடம் கற்கவில்லை என்பதையே இந்தக் கோழைத்தனமான தாக்குதல் உணர்த்துகிறது.

மக்கள் இறையாண்மை மக்களிடமே உள்ளது என்பதை முன்னெப்போதையும் விட அதிகமாக நிரூபிக்கப்படும் இச்சூழ்நிலையிலும் கூட இவ்வளவு கொடூரமாக நடந்துகொள்ள பாதுகாப்புப் படையினருக்கு பணிப்புரை வழங்கியது யார் என்பதும், சிரச ஊடகவியலாளர்களையே குறிவைத்து தாக்குதலை நடத்தும் தேவை யாருக்குள்ளது என்ற விடயத்தில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

உடனடியாக பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.

எந்தவொரு சக்திவாய்ந்த அதிகாரமும் மக்கள் சக்தியால் தோற்கடிக்கப்படும் என்பதை சட்டவிரோத பிரதமர் அறிந்திருக்க வேண்டும் என்பதோடு, நாடு அராஜக நிலைக்கு செல்ல வழிவகுக்காமல் அவர் உடனடியாக பதவி விலகவேண்டும் - என்றுள்ளது. (அ)

# புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும்

## முன்னிலை சோஷலிச கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 11

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என முன்னிலை சோஷலிச கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடாத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில் யாருக்கு அதிகாரம் கிடைத்தாலும் போராட்டத்தின் எதிர்பார்ப்புகளுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும்.

மேலும் ஜனாதிபதி, சபாநாயகர் ஊடாக 13 ஆம் திகதி பதவி விலகுவதாக அறிவித்துள்ளமை மற்றுமொரு சதியோ தெரியவில்லை. காரணம் இவர்களுடைய அரசியல் வரலாறு அப்படிப்பட்டது - என்றார். (அ)

# எரிபொருள் விநியோகத்தை மீளவும் ஆரம்பித்தது ஐ.ஓ.சி.

கொழும்பு, ஜூலை. 11

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்தது.

அதிகபட்ச செயற்றிறனுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா குறிப்பிட்டார்.

இதற்காக, திருகோணமலை முனையத்தின் செயற்பாடுகளை 24 மணித்தியாலங்களும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த இரு தினங்களாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், தமது எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கவில்லை.

திட்டமிடப்பட்ட போராட்டங்களைக் கருத்தில் கொண்டு எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்துவதற்கான அறிவுறுத்தல்களைப் பெற்றதாக கடந்த 8 ஆம் திகதி மனோஜ் குப்தா ருவிட்டரில் பதிவிட்டிருந்தார். (அ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12 - 04 - 1944



மறைவு
13 - 06 - 2022

திருமதி
பசுபதிப்பிள்ளை யோகம்மா

எம் இனிய அம்மாவே
நீங்கள் செய்த தியாகங்கள் தான் எத்தனை
எமக்காக மெழுகுவர்த்தியாய் உருகினீர்கள்
நீங்கள் மறைந்தது ஒரு கனவுபோல் உள்ளதே
நீங்கள் மறைந்தாலும் எம்மோடு
எப்போதும் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
வித்தி - மகன்
Mobile : +16479880436

தகவல் :
குடும்பத்தினர்.


# ஜனாதிபதி கோட்டாவுடனான தொடர்பைத் துண்டிக்கின்றேன்

## சோதிடர் ஞானாக்கா அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துக் கொள்வதாக பிரபல சோதிடரான அனுராதபுரம் ஞானாக்கா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யூரியூப் காணொலி வலையமைப்பு ஒன்று வெளியிட்ட காணொலியில் கூறப்பட்டுள்ளதாவது:

கோட்டாபய ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலருக்கும் ஞானாக்காவுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலில், கோட்டாபாய குடும்பத்துக்கும் அவரது கோவிலுக்கும் 13 வருடங்களுக்கும் மேலான தொடர்புகள் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனது விகாரைக்கு வருகை தந்திருந்தபோதிலும், ஜனாதிபதியாகி ஒரு வருடமாகியும் அவர் தன்னைப் பார்க்க வரவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய தனது கோவிலுக்கு அரசியல் முடிவுகளுக்கு ஆலோசனை பெற வரவில்லை என்றும் நோய்க்காக அம்மனிடம் சிகிச்சை பெறவே வந்தார் எனவும் அவர் கூறினார்.

தயாசிறி ஜயசேகர, உதய கம்மன்பில போன்ற பல அரசியல்வாதிகள் தனது கோவிலுக்கு தேடி வருவதை வெளிப்படுத்திய அவர், தற்போது அரசியல்வாதிகளுக்கு சேவைகளை வழங்குவது குறித்து வருத்தமடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது கோவில் மற்றும் விடுதி எரிக்கப்பட்டதற்கு அரசியல்வாதிகளுடனான தொடர்புகளே காரணம் என்று கூறுகின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இனி வரும் காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷவுடன் எந்தவித தொடர்பையும் வைத்துக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர், ஹிருணிகா பிரேமச்சந்திரவின் கருத்துக்களால் சமூகம் தன்னைப் பற்றி தவறான பிம்பத்தை உருவாக்கியுள்ளது என்றும் கூறினார். (அ)

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் யாழ்.ஊடக அமையம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜுலை. 11

மீண்டும் ஒரு முறை ஊடகவியலாளர்களது பாதுகாப்பு தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்துவதாக சக்தி-சிரச ஊடகவியலாளர்கள் மீதான இலங்கை அதிரடிப் படையின் தாக்குதல் அமைந்துள்ளது என்று யாழ்.ஊடக அமையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

ஊடகவியலாளர்களது பணிகளை முடக்கும் வகையிலான தாக்குதல்களை வன்மையாக கண்டித்துள்ள யாழ்.ஊடக அமையம் தொடர்புடைய சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களை மீட்க வந்த ஊடகவியலாளர்கள் மீது இலங்கை விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் வன்முறைத் தாக்குதல்களை நடத்தியமையினை யாழ்.ஊடக அமையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

உன்னதமான ஊடகப்பணி காரணமாக 41 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் 2000ம் ஆண்டு முதல் காவு கொள்ளப்பட்டுள்ளனர்.சிலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

சக்தி - சிரச ஊடக வலையமைப்பு உள்ளிட்ட பல ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுமிருந்தன.

அரசியலமைப்பில் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை சட்டங்களின்படி வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் அவர்களின் அடிப்படை உரிமை மீறல்களுக்கு ஆளாகியுள்ளனர்.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையை நடைமுறைப் படுத்த 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சித்திரவதை அல்லது தண்டனைச் சட்டத்திற்கு எதிரான உடன்படிக்கையை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதை யாழ். ஊடக அமையம் சுட்டிக்காட்டவும் விரும்புகின்றது.

தற்போதைய நெருக்கடி மிக்க கால எல்லையினுள் தலைநகர ஊடகவியலாளர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த அனைத்து தரப்பினையும் கோரி நிற்கின்ற யாழ்.ஊடக அமையம் இன,மத மொழி வேற்றுமை தாண்டி சக ஊடகவியலாளர்களது உரிமைக்கு கைகோர்த்து நிற்குமென்பதையும் அறியத்தருகின்றது- என்றுள்ளது. (அ)

# அமைச்சர்களின் பதவி விலகலை ஏற்றுக்கொள்ளவில்லை கோட்டா

கொழும்பு, ஜுலை. 11

கொழும்பில் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சியை அடுத்து அமைச்சர்கள் பலரும் தமது பதவி விலகல் முடிவை அறிவித்து வருகின்றனர். ஆயினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்களின் பதவி விலகல் முடிவை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர்களான பந்துல குணவர்தன, மகிந்த அமரவீர, ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, தம்மிக்க பெரேரா ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

ஆயினும் அவர்களின் முடிவை ஜனாதிபதி கோட்டாபய இதுவரை ஏற்றுக்கொள்ளாமையால் அவர்கள் தமது கடமையில் தொடர்வதாகவே கருதப்படுவர் என அமைச்சுக்களின் செயலாளர்கள் அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளனர் என தெரியவந்தது. (அ)

# அம்புலன்ஸ் சேவைகள் வவுனியாவில் முடக்கம்

வவுனியா, ஜுலை. 11

வவுனியாவில் 1990 நோயாளர் அம்புலன்ஸ் சேவையை முடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் அவசர அம்புலன்ஸ் சேவையான 1990 சேவைக்கு எரிபொருள் இல்லாத நிலையில் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசல் வழங்கப்படவுள்ள நிலையில் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் டீசல் நிரப்புவதற்காக அம்புலன்ஸ் வரிசையில் காத்து நிற்கின்றது.

வார நாட்களில் இலங்கை போக்குவரத்து சபையால் எரிபொருள் வழங்கப்பட்டாலும் வார இறுதி நாட்களில் எரிபொருள் இல்லாமல் குறித்த சேவைகள் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. கடந்த வாரங்களில் இ.போ.சவினரால் மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக எரிபொருள் பெற முடியாத நிலை ஏற்பட்டதுடன், ஐ.ஓ.சி எரிபொருள் விற்பனை நிலையத்தில் அவசர சேவைக்கான எரிபொருட்கள் கையிருப்பில் வைத்துக்கொள்ளப்படாத நிலைமையும் உள்ளது.

தற்போது நிலவிவரும் எரிபொருள் நெருக்கடியால் பொதுமக்களின் போக்குவரத்து முற்றாக முடங்கியுள்ள நிலையில் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு திடீர் நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாமல் இறப்புக்கள் பதிவாக கூடிய அதிக சந்தர்ப்பம் உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இயங்கும் மூன்று அம்புலன்ஸ்களில் இரண்டு வண்டிக்கு டீசல் இல்லாத அபாய நிலை உருவாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## நெருக்கடிகளுக்கு...

கோட்டாபய பதவி விலகத் தயாராகி வரும் நிலையில், அரசியல் கட்சி பேதங்களைக் கடந்து தேசத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்புடன் இந்த தருணத்தை அணுகுமாறு இலங்கை பாராளுமன்றத்துக்கு அமெரிக்கா அழைப்பு விடுக்கிறது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு தூர நோக்குடன் செயற்படவேண்டும். மின்சாரம், உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பான இலங்கை மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளை கண்டறிந்து விரைவாக நடைமுறைப்படுத்துமாறு தற்போதைய இலங்கை அரசை அல்லது அரசியலமைப்பு ரீதியாக தெரிவுசெய்யப்படவுள்ள புதிய அரசாங்கத்தையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எதிர்ப்பு போராட்டக்காரர்கள் அல்லது பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் எதிராக அமெரிக்கா எச்சரித்துள்ளது. எனினும் போராட்டங்களின்போது ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்ட வன்முறைகளையும் அமெரிக்கா விமர்சித்துள்ளது.

அமைதியான முறையில் குரல் எழுப்ப இலங்கை மக்களுக்கு உரிமை உள்ளது. அதேநேரம் போராட்டங்களின் போது வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட எவரையும் கைது செய்து, முழுமையாக விசாரணை மேற்கொள்ளவும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கவும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## இராணுவ...

செல்லப்பட்டார்” என்று பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர், அனைத்துலக ஊடக நிறுவனமான ஏ.எவ்.பியிடம் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கோட்டாபய ஜனாதிபதியாக இருப்பதால், இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் தொடர்ந்தும் போராட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாகவும், கோட்டாபய பதவி விலகவுள்ள 13 ஆம் திகதி வரையில் தாங்கள் தங்கியிருப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களை அகற்றுவதற்கு படையினர் இதுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்புத் துறைமுகத்தில் இருந்து நேற்று முன் தினம் புறப்பட்ட கடற்படைக்கு சொந்தமான இரண்டு கப்பல்களில் சென்றது யார் என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. ஆயினும், ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் உறவினர்களே கப்பலில் சென்றிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இலங்கை...

டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளது.

அமைதியான, ஜனநாயக மற்றும் ஒழுங்கான மாற்றத்துக்கு ஒத்துழைக்கவும் கவனம் செலுத்தவும் அனைத்துத் தரப்பினருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மேலும், தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண வழிவகை செய்து இயல்பு நிலைக்குத் திரும்புவது அனைத்துக் கட்சித் தலைவர்களின் பொறுப்பாகும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கையின் சனத்தொகைக்கான தனது ஆதரவை மேலும் அதிகரிப்பதற்கான தெரிவுகளை மதிப்பீடு செய்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கை நிலைமை...

கவலையடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார சவால்கள், விலைவாசி உயர்வு மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவை இலங்கை மக்களுக்கு பெரும் சிரமத்தையும் துன்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த பாரதூரமான நெருக்கடியில் இலங்கையுடனும் அதன் மக்களுடனும் காங்கிரஸ் கட்சி ஒற்றுமையாக நிற்கிறது மற்றும் அவர்களால் அதை சமாளிக்க முடியும் என்று நம்புகிறது.

தற்போதைய சிரமங்களை கையாள்வதில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று சோனியா காந்தி கூறினார்.

இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் ஆதரவையும் வழங்குமாறு அவர் சர்வதேச சமூகத்தை கேட்டுள்ளார். (அ)

## இலங்கை நெருக்...

யும் என நம்புவதாகவும் நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் குறிப்பாக ஏழைகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க, இந்த கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கைக்கான உதவிகள் தொடர்பில் நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் தொடரும் எனவும் சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## சர்வகட்சி...

மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையை 10 ஆக மட்டுப்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசாங்கத்தில் இணையும் எந்தவொரு அரசியல் கட்சியின் தலைவருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்காது மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உள்ளடக்கிய தேசிய தலைமைத்துவ சபை நிறுவப்படும்.

இந்த சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக தேசிய நிபுணர் குழுவொன்றும் நிறுவப்படும். அது கல்வியாளர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைக் கொண்டதாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## விமல் மீது...

கொண்டுவிட்டு செல்லும் வழியிலேயே இவ்வாறு தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து உடனடியாக அங்கிருந்து தனது வாகனத்தில் ஏறி விமல் வீரவன்ஸ பாதுகாப்பாக வெளியேறிச் சென்றுள்ளதாகவும் கூறப்பட்டது. (அ)

## காயமடைந்தோர்...

கொழும்பின் பிரபல ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் மீது பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் கடுமையாக தாக்குதல் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கு...

எழுந்துள்ள பிரச்னைகளுக்கு தீர்வை காண இலங்கை முயற்சித்து வருவதாகவும் அடுத்த நடவடிக்கை தொடர்பாக அவதானித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“நாங்கள் இலங்கைக்கு ஆதரவாக இருந்து வருகிறோம், உதவி செய்ய முயல்கிறோம், எப்பொழுதும் உதவி செய்து வருகிறோம்” என அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பேக்கரி உற்பத்திகள் இல்லாமல் போகும்!

கொழும்பு, ஜூலை. 11

தற்போதைய நெருக்கடி மற்றும் பொருளாதார சூழ்நிலையில் பாண்கள் உள்ளிட்ட பேக்கரி உற்பத்தி இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் இல்லாமல் போகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பேக்கரி உற்பத்திகளை நிறுத்த வேண்டி வரும் என வரும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பேக்கரி உணவு உற்பத்திக்கான பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக தற்போது பேக்கரிகளில் 50 வீத உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

மிகுதியும் மிக விரைவில் நின்றுவிடும். பேக்கரித் தொழில் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதாகவும், நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் வீழ்ச்சியடையும் எனவும் நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

இந்த எரிபொருள் நெருக்கடி குறித்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் தெரிவித்தோம். ஆனால் அமைச்சரிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் இல்லை.

பேக்கரி உற்பத்தியும் அத்தியாவசிய சேவை பிரிவின் கீழ் வருகிறது. ஆனால் பேக்கரி தொழிலை மீட்க இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை-என்றார். (அ)

# இன்று முற்பகல் மீண்டும் கட்சி தலைவர்கள் கூட்டம்



கொழும்பு, ஜூலை. 11

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று மீண்டும் கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டார்.

நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று முன் தினம் மாலை எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவது குறித்து இன்று கலந்துரையாடப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். (அ)







# இராணுவ பலத்தைவிட மக்கள் சக்தியின் பலத்தைப் புரிந்து இருப்பார் கோட்டாபய!

## கூறுகின்றார் ரில்வின் சில்வா



கொழும்பு, ஜூலை. 11

**இராணுவ பலத்தை விட மக்கள் சக்தியின் பலத்தை கோட்டாபய ராஜபக்ச தற்போது புரிந்து கொண்டு இருப்பார் என்று ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

**இது தொடர்பாக பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல மாதங்களாக நடைபெற்று வரும் போராட்டத்தில் மக்களின் குரலை கோட்டாபய புரிந்து கொள்ளவில்லை. அவரின் இராணுவ பலத்தை விட மக்கள் சக்திதான் அதிக சக்தி வாய்ந்தது, முக்கியமானது என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது. அதனை தற்போது அவரும் புரிந்து கொண்டு இருப்பார் என்று நம்புகின்றேன்.

பிடிவாதமாக ஆட்சியில் இருக்க முயற்சித்த கோட்டாபய, ஆட்சியை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. மரியாதையாக வெளியேறவேண்டியவர், பின் கதவால் வெளியேறி, ஓடி ஒளிந்து கொள்ளவேண்டியிருந்தது. தற்போது அவர் எங்கே இருக்கின்றார் என்பது யாருக்கும் தெரியாது.

கோட்டாபய அவ்வாறு நடந்து கொள்ளாமல் மரியாதையுடன் சீக்கிரமாக வெளியேறி இருந்தால் சமுதாயத்தில் ஒரு நற்பெயரை வைத்திருந்திருப்பார். இந்தப் போர் தொடங்கியபோது இவர்கள்தான் ஆட்சியாளர்களா என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது.

பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ச விலக வேண்டியதாயிற்று. அவர் வகித்து வந்த பிற அமைச்சுப் பதவிகளில் இருந்தும் விலக வேண்டியதாயிற்று. பஸில் ராஜபக்ஷ அமைச்சர் பதவி உள்ளிட்ட அனைத்து பதவிகளையும் விட்டு விலகவேண்டியதாயிற்று.

இறுதியில், ஜனாதிபதி மாளிகையை விட்டு கோட்டாபய வெளியேறவேண்டி வந்து விட்டது. எதிர்வரும் 13 ஆம் திகதிக்குள் அதிகாரபூர்வமாக பதவி விலகவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். போர் வெற்றிகளைப் பயன்படுத்தி ராஜபக்ஷ குடும்பம் கட்டியெழுப்பிய சாம்ராச்சியம் இதன் மூலம் முடிவுக்கு வந்திருகின்றது.

தற்போது எமது நாட்டுக்கு முன்பாக பல கடுமையான சவால்கள் உள்ளன. எண்ணெய் பிரச்னை, எரிவாயு பிரச்னை, பொருட்கள் தட்டுப்பாடு, வேலை இழப்பு போன்ற பிரச்னைகள் இன்னும் உள்ளன.

கோட்டாபயவை வெளியேற்றினால் மட்டும் எமது நாடு எதிர்நோக்கும் பாரிய சமூக, பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வது சாத்தியமில்லை.

நாடு மீண்டு வரவேண்டுமாயின், ஆணைப்படி புதிய அரசாங்கம் அமைக்கப்படல் வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலுக்குப் பின்னரான சூழலைப் பயன்படுத்தி தமது பழைய குழுக்களை மீண்டும் நிலை நிறுத்தி அதிகாரத்தைத் தமது கைகளில் எடுக்க சிலர் கனவு காண்கின்றனர்.

மோசடி ஆட்சியை முன்னர் புரிந்தவர்கள் பிரதமர் கனவை, ஜனாதிபதி கனவை பிடித்து, அமைச்சர் பதவிகளை பிடிக்க முயற்சிக்கின்றனர். கோட்டாபயவை அகற்ற வேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் முழக்கமாக இருந்தாலும், 74 வருடங்களாக பேணப்பட்டு வந்த தவறான பொருளாதார அமைப்பையும் கொடுங்கோல் அரசியலையும் இல்லாதொழிக்க விரிவான மாற்றம் வேண்டும் என்ற விருப்பம் உள்ளது. அந்தப் போரில் மக்கள் இருந்தனர். தேர்தலின் மூலம் ஆட்சியைப் பிடிக்கும் புதிய அரசாங்கத்தின் மூலம் இந்தப் போரை இறுதி வெற்றியாக மாற்ற முடியும் என்பதை அனைவரும் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளனர்-என்றார். (அ)

# மாணவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 11

மானிப்பாயில் தவறான முடிவினால் மாணவரொருவர் உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனந்தன் வீதியை சேர்ந்த 15 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழில் பிரபல பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்று வந்த 15 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்கு ஒப்படைப்பு.

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கைக்கு செல்லாதீர்!

## பஹ்ரைன் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 11

இலங்கைக்கு செல்ல வேண்டாம் என தமது நாட்டு பிரஜைகளுக்கு மத்திய கிழக்கு நாடான பஹ்ரைன் அறிவுறுத்தியுள்ளது.

அதேசமயம் இலங்கையில் தங்கியிருக்கும் தமது நாட்டு பிரஜைகளை உடனடியாக நாடு திரும்புமாறும் அந்த நாடு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது நாட்டுப் பிரஜைகளை அழைத்துள்ளதாக பஹ்ரைன் குறிப்பிட்டுள்ளது.

அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் அந்நாட்டு குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் இருக்கும் அதன் பிரஜைகள் தமது சொந்த பாதுகாப்பிற்காக உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறும், அமைதியின்மை நிலவும் பகுதிகளில் பயணிப்பதை தவிர்க்குமாறும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே ஒரு நாள் மற்றும் வழக்கமான சேவை

## குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 11

கடவுச்சீட்டு விநியோகம் தொடர்பில் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இன்று முதல் திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே ஒரு நாள் மற்றும் வழக்கமான சேவைகளின் கீழ் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.